P 874

மேழிச்செல்வம்

பயிர் வளம் பெருக்க

பசுந்தாள் உரம்

சோபகிருது ௵ மாசி ௴



தஞ்சை பொருட் காட்சியில் விவசாய அரங்கை முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் பார்வை யிடுதல்.

தஞ்சை பொருட்காட்சி யில் விவசாயக் கண் காட்சியை திரு. பி. கக்கன், உள்துறை விவசாய அமைச்சர், பார்வையிடுதல்.





ராணி மேரிக் கல்லூரி யில் நடந்த கூட்டத் தில் விவசாயத் துறை நெறியாளர் டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி தலைமை உரையாற்று தல்—சொற்பொழி வாற்றிய டாக்டர் M. S. ராந்தாவா, I.C.S. திட்டக் கமிஷன் ஆலோசகரையும், கல் லூரி முதல்வர் டாக்டர் குமாரி ஐராவதியை யும் காணலாம்.

மேழிச் செல்வம்

உள்ளுறை

	பக்கம்
எலி வளைகளின் அமைப்பும், வளைகளை வெட்டி எலி பிடிக்க முக்கிய குறிப்புகளும்	5
உற்பத்திப் பெருக்கத்தில் உரமிடுதலும், இலவச மண் பரிசோதனையும் ..	8
சென்னை மாநிலத்திற்கு ஏற்ற சிறந்த கத்தரி ரகங்கள்	10
நஞ்சைத் தரிசில் பருத்தியைச் சாகுபடி செய்தல்	14
கன்றுகளைப் பராமரித்தல்	16
" கார்பரில் "	18
பூசணமும் விதை சேமிப்பும்	19
ஸ்ப்ரேயர்கள், டஸ்டர்களை பராமரித்து பாதுகாக்க விவசாயிகளுக்கு உதவும் குறிப்புகள்	20
திட்டமிட்டு செயலில் இறங்கினல் வெற்றி நிச்சயம்!	22
விவசாயச் செய்திக் கதிர்	23
"மேழிச் செல்வம்" சந்தாதாரர்களுக்கு நினைவூட்டுகிறேம்	24
வெற்றிப்பாதை (விவசாய விளம்பர நாடகம்)	26
1963-ம் ஆண்டு நவம்பர் மாதத்திய காலநிலை அறிக்கை	28
சோரையைத் தடுக்க ஓர் வழி	29
"மேழிச் செல்வத்"தில் விளம்பரம் செய்வதற்கு அனுசரிக்கவேண்டிய நிபந்தனைகளும் கட்டுபாடுகளும் ..	30

விளம்பரங்கள் :

டி.ஏ.வி.பி.	4
ராஜா பண்ணைத் தோட்டம் ..	7
கிர்லோஸ்கர் ஆயில் என்ஜின்ஸ் லிட்.	13
ரங்கசாமி அண்டு கம்பெனி ..	17
சேலம் நர்சரி கார்டன்ஸ் ..	19
டாடா-பைஸன் அண்டு ராலீஸ் ..	21
பொட்டாஷ்	25

வெளியிடுபவர் :

தமிழ்நாடு விவசாயத்துறை நெறியாளர்

சென்னை-5

வருட சந்தா	ரூ.	3·00
தனிப்பிரதி	ரூ.	0·25

தபால் பில்லைகளை கவனமாக ஒட்டுங்கள்

தபால் கட்டுகளின் வேகத்தை அதிகரியுங்கள்

* சரியான மதிப்புள்ள தபால் பில்லைகளை ஒட்டுங்கள்



* விலாசம் உள்ள பக்கத்தின் வலது மேல் மூலையில் தபால் பில்லைகளை ஒட்டுங்கள்

* தேவையான மதிப்பிற்கு, குறைவான எண்ணிக்கையுள்ள பில்லைகளே உபயோகியுங்கள்



* கீழே விழும்படி தபால் பில்லைகளை ஒட்டாதீர்கள்.

தபால்
தந்தி
இலாகா

DA 63/476

மேழிச்செல்வம்

சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனு
லுழந்தும் உழவே தலை.

மலர் 21 | சோபகிருது௵ மாசிமீ —1964— பிப்ரவரி-மார்ச் | இதழ் 2

எலி வளைகளின் அமைப்பும், வளைகளை வெட்டி எலி பிடிக்க முக்கிய குறிப்புகளும்

[P. R. நாகராஜ ராவ், B.A., B. வேலாயுதம், Bsc. (Ag.), ஆடுதுறை.]

பயிரின் முக்கிய விரோதி வயல் எலிகள். இவை சில வயல்களில் பயிருக்கு 75 சதவீதத்திற்கும் மேற்பட்ட சேதத்தை விளைவிக்கின்றன. எனவே உழவர்கள் ஒன்று சேர்ந்து எலி வளைகளை வெட்டி எலிகளைப் பிடித்து அழிக்க வேண்டியதன் அவசியத்தை அவர்களுக்கு பொது நல ஊழியர்கள் உணர்த்தி வருகின்றனர். இவ்வாறு எலிகளை ஒழிக்க, விவசாயிகள் எலிவளையின் அமைப்பும், வளைகளை வெட்டி எலிகளைப் பிடித்து அழிக்கவேண்டிய அவசியத்தையும், அதற்கேற்ற காலத்தையும் அறிவது நல்லது.

வளைகளை வெட்டி எலி பிடிக்கவேண்டியதன் அவசியம்.—எலி பாஷாணம், கிட்டி இவைகள் இருக்கும்போது எலி வளைகளை வெட்டி எலி பிடிக்க வேண்டியது அவசியமா என்றும், வளைகளை வெட்டும்போது வயல் வரப்புகள் சீர்கெட்டுவிடுமோவெனவும் சிலர் ஐயமடைவதுண்டு. வயல் எலிகளின் தன்மையும், அவற்றால் ஏற்படும் சேதத்தையும் கருதும்போது இந்த சந்தேகத்திற்கு இடமே இல்லை என்பதை அறியலாம். எலிகளால் ஏற்படும் நஷ்டத்தைவிட வளையுள்ள இடங்களில் மட்டும் வரப்புகளை வெட்டி, எலிகளைப் பிடித்தபின் வரப்புகளைச் சீர்செய்துவிடுவதால் ஏற்படும் செலவு மிகவும் குறைவு.

அன்றியும் தடவைக்கு 10 முதல் 13 வரை பிறக்கும் எலியின் குட்டிகள் கண் விழிக்க சுமார் 15 நாட்களாகிறது. அதுவரை அவை தாய் எலி அமைத்த படுக்கையை விட்டு அகலுவதில்லை. கண் விழித்து, ஓரளவு வளர்ந்தபின் இவை இளமையில் ஒரே வளையில் இருந்தது போலன்றி தனித்தனி வளைகளுக்குச் சென்று வசிக்கின்றன. இதற்குள் இவை பயிரைக் கடித்து அழிக்கும் பலமும் பெற்றுவிடுகின்றன. பெரும்பாலும் இவ்வாறு வளர்ந்த எலிகளே கிட்டிக்கும், எலி பாஷாணத்திற்கும் அதிகமாக பலியாகின்றன. எனவே இவ்வெலிகள் வளர்ந்து பயிரை அழிக்க பலம் பெருவதற்குமுன், கண் விழிக்காத குட்டிகளாக இருக்கும்போதே வளைகளை வெட்டித் திறந்து இவற்றை பிடித்துக் கொல்வது சுலபம், செலவும் குறைவு. அன்றியும் எலி பாஷாணத்தையும் கிட்டிகளையும், திறமையுடன் தப்பித்த சில எலிகளையும் இவ்வழியில் பிடித்துவிடலாம்.

வளைகளை வெட்டிப் பிடிக்கவேண்டிய காலம்.—மேற்சொன்ன குறிப்புகளிலிருந்து எலிகள் அதிகமாக குட்டி போடும் காலமே இவ்வாறு அவற்றைப் பிடிக்க ஏற்றதென்பது தெளிவாகும். ஆடுதுறையில் சென்ற சில ஆண்டுகளாக செய்த ஆராய்ச்சியின் பலனாக வயல் எலிகள், வயலில் பயிர் முற்றி அறுவடைக்கு வரும் காலத்தில்தான் அதிகமாக குட்டிகள் போடுவதை அறிய முடிந்தது. எனவே பயிர் அறுவடைக்கு முன்னும் பின்னுமாகச் சேர்ந்து உள்ள, சுமார் ஒரு மாத காலமே வளைகளை வெட்டி எலிகளைப் பிடித்து அழிக்க சாலச் சிறந்த காலமென்பது விளங்கும். இந்த சமயத்தில் வளைகளில் பெரும்பாலும் கண் காது திறக்காமல், ரோமம் வளராமல் இருக்கும் குட்டிகளும், வளர்ந்த எலிகளுமாக சுமார் 100 அடி வரப்புக்குள் 100-க்கும் மேற்பட்ட எலிகள் காணப்படுவதும் உண்டு. மண்ணில் ஈரம் இருப்பதால் வளைகளை வெட்டுவதும் சுலபம். எலிகள் வளையில் வெட்டிக் குவித்த நெல் போன்ற தானியங்களும் திரும்ப கிடைத்துவிடுகிறது.

இவ்வாறு குட்டிபோடும் காலம் தவிர மற்ற காலங்களில் எலியின் இனத்திற்கேற்ப வளைக்கு ஓரிரண்டு எலிகளே காணப்படும். எனினும் பயிரில் எலியின் சேதம் அதிகம் தென்பட்டாலும், அல்லது கோடைக்கால மழைக்குப்பின் ஈர மண்ணாக இருக்கும் போதும் வளைகளை வெட்டி எலிகளை அழிப்பது அவசியம்.

எலி வளைகளைக் கண்டுபிடித்தல்.—வளையை வெட்டுவதற்கு முதலில் வளையின் இருப்பிடத்தை அறிவது அவசியம். எலிகள் பெரும்பாலும் வயல் வரப்புகளில்தான் காணப்படும். அதுவும் வரப்பினுள்ள புதர் அல்லது மரங்களுக்கடியில் அதிகமாக வளைகள் இருக்கும். தண்ணீர் வற்றிய பின் நஞ்சை நிலத்திலும் புஞ்சை நிலத்திலும், இவை நடு வயல்களிலும் காணப்படும். நஞ்சை நிலங்களில் நண்டு வளைகளும் அதிகம் உண்டு. ஆனால் இவை பெரும்பாலும் செங்குத்தாக கீழ்நோக்கிச் செல்பவை. எலி வளைகள் சாய்வாக உள்நோக்கிச் செல்லும். நண்டு வளையின் துவாரத்தைச் சுற்றிலும் சுவர்போல் மண் அணைக்கப்பட்டிருக்கும். எலி வளையின் துவாரத்தில் இதுபோல் மண் அணைக்கப்பட்டிருக்காது. ஆனால் வளை துவாரத்தின் அருகில் அறுக்கப்பட்ட வளை மண் குவியலாகக் கிடக்கும். எலிகள் வளையிலிருந்து சிறிது தூரத்திற்கு குறிப்பிட்ட பாதைகளைத்தான் (எறும்புபோல்) பின்பற்றுகின்றன. இப்பாதைகள் சுமார் மூன்று அங்குல அகலத்திற்கு தேய்ந்து வழவழப்பாக காணப்படும். எனவே இவ்வித எலியின் பாதைகளைக் கொண்டும், வளை மண் குவியலாகக் கிடப்பதைக் கொண்டும் எலிவளைகளை சுலபமாகக் கண்டு பிடிக்கலாம்.

வளையில் எலி இருப்பதை அறிவது.—பல எலிகள் இயற்கை விரோதிகளாலும் தடுப்பு முறைகளாலும் கொல்லப்பட்டுவிடுவதால் எல்லா வளைகளிலும் எலி இருப்பதில்லை. வளையில் எலி இருந்தால் வளையின் வெளி துவாரம் ஈரமண்ணால் அடைக்கப்பட்டிருக்கும். சில சமயம் வெளியில் இவ்வாறு அடைக்கப்படாவிட்டாலும், சுமார் அரை அடி உள்தள்ளி அடைக்கப்பட்டிருப்பதுண்டு. நடு வளையிலும் ஆங்காங்கு இவ்வித அடைப்புகளுண்டு. வளை திறந்திருந்தாலும் வளை துவாரத்தில் ஒட்டடை, தூசிகள் இன்றி எலி நடமாடுவதால் ஏற்பட்ட தரைப் புழக்கம் இருக்கும். வளைக்கருகில் எலியின் புதிய நடை பாதைகளும் காணப்படலாம். அறுத்துத் தள்ளப்பட்ட புதிய வளை மண்ணும் குவியலாகக் காணப்படும். இந்த மண்ணுடன் காணும் ஓரிரு எலி புழுக்கைகள், புல் அல்லது பயிரின் சிறிய இலைத் துண்டுகள், உதிர்ந்த தானியங்கள் அல்லது தானியத்தின் கொரித்த தோல்கள் முதலியனவும், எலி வளையில் இருப்பதை உணர்த்தும். சாதகமான மண் பரப்பிருந்தால் எலியின் காலடிகளும் வளைக்கருகில் காணப்படுவதுண்டு. எனவே மேற்சொன்ன குறிப்புகளால் எலி வளையில் இருப்பதை அறியலாம்.



எலி வளைகளின் அமைப்பு.—எலி வளையின் நீளம் சுமார் மூன்று முதல் இருபது அடியாகும். ஐம்பதடிக்கும் அதிக நீளமுள்ள வளைகளும் உண்டு. வளை சிறிது உள் நோக்கிச் சென்ற பின் சில கிளைகளாகப் பிரியும். இவ்வாறு பிரிந்த கிளைகள் ஒரு ஒழுங்கான அமைப்பின்றி பக்கவாட்டிலும், மேலும் கீழுமாகவும் பின்னப்பட்ட கொடிபோல் இருக்கும். இக்கிளை வளைகள் பெரும்பாலும் சிறிது தூரம்

சென்றபின் திறப்பின்றி முடிந்துவிடும். ஆனால் சில கிளை வளைகள், தரை அல்லது வரப்பின் மேல் மட்டம் வரை துவாரம் செய்யப்பட்டு, துவாரம் வெளியில் தெரியா தவாறு சுமார் அரை அங்குல மண்ணால் அடைக்கப்பட் டிருக்கும். இவ்வாறு அடைத்து வைக்கப்பட்ட வளை துவாரத்தை பொட்டம் என்று சொல்வதுண்டு. இப் பொட்டங்களுக்கருகில் முன் சொன்ன நடைபாதை, புழுக்கை, காலடிகள் போன்ற எந்த சின்னங்களும் இருக்காது. இவை புல் அல்லது செடிகளுக்கருகில் மறைவான இடத்தில் அமைந்திருக்கும்.

வளையின் நடு பாகத்தில் ஒரு இடத்தை சிறிது விஸ்தார மாகச் செய்து எலிகள் படுக்கை அறையாக உபயோகிக் கின்றன. இதில் காய்ந்த புல், வைக்கோல், இலை இவற்றால் ஆன எலியின் படுக்கை அமைக்கப்பட்டிருக்கும்.

எலிகள் வளையின் சில கிளைகளை சிறிது பெரிதாக்கி உணவுக் கிடங்குகளாகப் பயன்படுத்துகின்றன. இவற்றில் பிற்காலத் தேவைக்காக நெல், உளுந்து, பயறு, கடலை போன்ற தானியங்கள் நன்றாகத் திணித்துவைக்கப்பட் டிருக்கும். அறுவடை காலத்தில் இவ்வித உணவுக்கான அறைகள் அதிகமாக காணப்படும். சில சமயம் வளையின் பெரும் பாகம் இவ்விதம் தானியங்களால் நிரப்பப்பட் டிருக்கும்.

வயல் வரப்பில் உள்ள ஒரு எலி வளையையும் அதன் பாகங்களையும் வளை மட்டத்திற்கு வரப்பை வெட்டியபின் மேலிருந்து பார்க்கும்போது தெரியும் தோற்றத்தைப் படத்தில் காணலாம்.

எலியைப் பிடிக்கும் விதம்.—வளையை வெட்ட ஆரம் பிக்குமுன் பொட்டங்கள் இருக்குமிடத்தை தரையை சந்தேகப்பட்ட இடங்களில் அழுத்திப் பார்த்து அறிந்து அடைத்துவிடவேண்டும். சில இடங்களில் வளையினுள் புகையை ஊதியும் பொட்டங்களை அறிகின்றனர். ஆனால் அடைப்புகள் அதிகம் உள்ள வளையில் இது பயன்படாது. பொட்டங்களை அடைத்தபின் வளையை ஒரு பக்கத்திலிருந்து மண்வெட்டி அல்லது தேனெடுக்கும் பாரையால் வெட்டித் திறக்கவேண்டும். கண் விழிக்காத குட்டிகளானால் எலியின் படுக்கையில் அல்லது படுக்கைக்கருகில் காணப் படும். இவற்றைப் பிடிப்பது மிகவும் சுலபம். வளர்ந்த எலிகள் வெட்டுமிடத்திற்கு அப்பால் கிளை வளைகளில் ஓடி, பொட்டங்களின் வழியாக தப்பிச் செல்ல எத்தனிக்கும். பொட்டங்கள் எலியால் மோதித் திறக்க இயலாமல் முன் சொன்னவாறு அடைக்கப்பட்டிருந்தால் அந்த மண்ணை விரைவாக அறுத்து தப்பிக்கவோ அல்லது வளையின் நடுவில் புது அடைப்புகள் ஏற்படுத்தவோ முயலும். வளைக்கருகில் உற்றுக் கேட்டால் இவ்வாறு எலி அறுப் பதையும் சில சமயம் கேட்க இயலும். எனவே ஒவ் வொரு கிளை வளையையும் கடைசி வரை திறப்பதுடன் அவை முடியும் தருவாயில் எலி தப்பிவிடா வண்ணம் சிறிது சிறிதாக திறக்கவேண்டும். அவ்வப்போது ஒரு சிறு குச்சியை வளைக்குள் புகுத்தி எலி இருந்தால், அக் குச்சி எலியின் உடலில் படும்போது ஏற்படும் அசைவைக் கொண்டு எலி இருப்பதை அறியலாம். இவ்வாறு எலியின் இருப்பிடத்தை அறிந்தபின் வளையின் வெட்டு வாய் வழியாக எலி தப்பிவிடாமல் வளையை ஓரளவு மூடிக்கொண்டு கையால் மண்ணைக் கெள்ளி, முதலில் எலியின் வாலையும், பின் கழுத்தையும் கவனமாகப் பற்றி எலியைப் பிடிக்கலாம் அல்லது வாலைப் பிடித்தபடி எலியை வேகமாக வெளியில் இழுத்து கையைக் கடித்து விடாமல் சுழற்றி தரையில் அடித்துக் கொன்றுவிடலாம். இவ்வாறு செய்யும்போது வாலின்மேல் தோல் மட்டும் உருவிக் கொண்டுவிடாமல் அழுத்தமாக பற்றுவது அவசியம்.

வளையை வெட்டும்போது முக்கியமாக கவனிக்கவேண் டியவை.—வளையைத் திறக்கும்போது வளர்ந்த எலி தப்பிவிடாமல் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். அப்படி தப்பினாலும் தயாராக வைத்திருக்கும் சிறு கழியால் அதை அடித்துக் கொல்ல விழிப்புடன் இருக்க வேண்டும்.

எலிகளை முழுதும் கட்டுப்படுத்தி பயிரைக் காக்க எலி பாஷாணம், தஞ்சாவூர்க்கிட்டி இவற்றை பயன்படுத்துவ துடன், வளைகளை வெட்டி எலியை அழிக்க வேண்டியதன் அவசியத்தையும் விவசாயிகள் உணர்ந்து பயனடைய வேண்டும்.

அதிக மகசூலால் அதிக வருவாய் பெறும்
பெரிய தோட்டக்காரர்கள்
சிறந்த ஜாதி காய்கறி விதைகள் பெறுமிடம் :

ராஜா பண்ணைத் தோட்டம்

இக்காலத்துக்குத் தகுதியான
நோய் அணுகா, அதிக மகசூல் தரும் கவர்ச்சிகர ஜாதி

வெண்டை

மிகப் பெரிய நீண்ட, சதை பருத்த ருசி
மிகுந்த அதிசய ஜாதி

கொத்தவரை

ருசி மிகுந்த, கவர்ச்சிகரமான 14 வித புகழ் பெற்ற

கத்திரி

புகழ் பெற்ற பெரிய ரோஜா உருண்டை பல்லாரி

வெங்காயம்

இதர பலவித உயர்ந்த கோடை மிளகாய்,
முள்ளங்கி ஜாதிகள், பரங்கி, பூசணி, வெள்ளரி
முதலான காய்கறி விதைகள், பழச் செடிகள்,
தென்னங் கன்றுகள், களை நாசினிகள்

கிடைக்குமிடம் :—

ராஜா பண்ணைத் தோட்டம்

தபால் பெட்டி எண். 1423, சென்னை-17.
போன் : 42262
தந்தி : RAJSEED

உற்பத்திப் பெருக்கத்தில் உரமிடுதலும், இலவச மண் பரிசோதனையும்

[C. இரத்தினம், P. சுவாமிநாதன், S. இலக்குமிநாராயணன், M. குருசாமி, மண்பரிசோதனை நிலையம், விவசாயக் கல்லூரி, ஆய்வுக் கூடம், கோயம்புத்தூர்–3.]

1. உற்பத்திப் பெருக்கத்தில் உரமிடுதலின் அவசியம்.—உற்பத்திப் பெருக்கத்தில் உரமிடுதல் தலையாயது. நிலவளம் குறையாமல் இருக்கவும், மேன் மேலும் அதிகப் பலன்தரவுரம் உரமிடுதல் இன்றியமையாததாகும். மூன்றும் திட்டத்தின் அதிகபடி உணவு உற்பத்தி குறிக்கோளான 33 சதவீதத்தில் 12·5 சதவீதம் இரசாயன உரங்களாலே. இதனால் உரத்தின் முக்கியத்துவம் நன்கு உணர்த்தப்பட்டிருக்கிறது.

2. பயிர்களுக்கேற்ப உணவுச் சத்துக்களின் தேவை மாறுபடுகின்றது.—எல்லாவித பயிர்களும் செழிப்பாக வளர தழைச்சத்து (nitrogen), மணிச் சத்து (phosphorus), சாம்பல் சத்து (potassium) ஆகிய மூன்று முக்கிய உணவுப் பொருள்கள் இன்றியமையாதவை. இந்த உணவுச் சத்துக்களின் அளவு பயிர்களுக்கேற்ப மாறுபடுகின்றது. இதை கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து அறியலாம்.

பயிர்.	ஏக்கருக்குத் தேவையான தழைச் சத்து (ராத்தல்).	மணிச்சத்து (ராத்தல்).	சாம்பல் சத்து (ராத்தல்).
1 நெல் ..	.. 30	30	..
2 கரும்பு ..	.. 250	65	80
3 நிலக்கடலை	.. 15	30	45
4 உருளைக்கிழங்கு	.. 80	200	100
5 வாழை ..	.. 200	70	250
6 திராட்சை ..	.. 60	30	100

நெல், கரும்பு ஆகிய பயிர்கள் அதிக அளவு தழைச் சத்தையும், நிலக்கடலை, கிழங்கு வகைகள் அதிக அளவு மணிச் சத்தையும், வாழை, திராட்சை போன்ற பழ வகைகள் அதிக அளவு சாம்பல் சத்தையும் அவைகள் பயிரிடப்படும் நிலத்திலிருந்தே எடுத்துக்கொள்ளுகின்றன. ஆகவே, நல்ல விளைச்சலைப் பெற பயிரினால் நிலத்திலிருந்து நீக்கப்பட்ட சத்துக்களை அந் நிலத்தில் உரங்களின்மூலம் சேர்த்தல் வேண்டும். நிலத்தில் போடும் உரங்களின் அளவு ஒரு இடத்தின் நில வளம், சாகுபடி செய்யப்படும் பயிர், மழையின் அளவு, சீதோஷ்ண நிலை இவைகளைப் பொருத்து மாறுபடும் தன்மை வாய்ந்தது. இதனைத் தக்க முறையில் அறிய மண் பரிசோதனை அவசியம்.

3. உரமிடுதலில் மண் பரிசோனையின் அவசியம்.—நோயாளியின் உடலைச் சோதித்து மருத்துவர் மருந்து கொடுப்பது போல், மண்ணைப் பரிசோதித்து அதில் உள்ள உணவுச் சத்துக்களின் அளவை மதிப்பிட்டுத் தக்க முறையில் உரமளிக்க மண் பரிசோதனை துணைபுரிகிறது. மண்ணைப் பரிசோதிக்காமல் உரமிடுவதால், உரத்தின் அளவு தேவைக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கும். முன்னதால் அனாவசிய பணச் சிலவும், பின்னதால் பயிர்களுக்கு உணவுச் சத்துக்களின் பற்றாக்குறையும் ஏற்பட்டு நல்ல மகசூல் கிடைப்பதில்லை. மண்ணைப் பரிசோதித்து தக்க உரத்தை தகுந்த காலத்தில் அளிப்பதால் குறைந்த செலவில் நிறைந்த ஊதியம் பெறமுடியும்.

பயிர்களுக்குத் தீங்கிழைக்கும் தீயகளர் (Alkalinity) உவர் (Salinity), அமிலத் தன்மை (Acidity) ஆகியவற்றை அறிந்து நிலத்தை சீர்திருத்த முடிகிறது. நிலத்தின் மேலே கூறிய தன்மைகளுக்கேற்ற தகுந்த உரத்தை சிபாரிசு செய்ய உதவுகிறது. நீண்ட கால் மண் பரிசோதனையால் மாவட்ட வாரியாக மண்வள வேறுபாடுகளை அறிந்துகொள்ள முடிகிறது.

4. மண்ணுடன் பாசன நீரையும் சோதித்தல் சிறந்தது.—உப்புக்கள் நிறைந்த நீரை பாசனத்திற்கு உபயோகிக்கும் பொழுது, நீர் ஆவியானவுடன், நீரில் உள்ள உப்புக்கள் நிலத்திலேயே தங்கிவிடுகின்றன. இதனால் நிலம் களராகவோ, உவராகவோ மாறிவிடுவதால் பயிரின் வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது. நல்ல நிலமும் உப்பு நிறைந்த தண்ணீரால் கெட்டுவிடக்கூடுமாதலால், மண்ணுடன் தண்ணீரையும் சோதித்தல் அவசியம்.

5. மண் மாதிரி எடுப்பதில் அதிக கவனம் தேவை.—ஒரு ஏக்கர் நிலப் பரப்பில் கலப்பை செல்லும் ஆழத்திற்கு உள்ள மண்ணின் எடை (weight of one acre furrow slice) இருபது லட்சம் ராத்தல். "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" போல ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு ராத்தல் மண் சோதிக்கப்படுவதால், மண் பரிசோதனையின் வெற்றி, மண் மாதிரி எடுப்பதைப் பொருத்தே இருக்கின்றது.

(1) நிலத்தின் வளம் (soil fertility), முன் பயிர் (previous crop), நிலத்தின் அமைப்பு (topography); மண்ணின் நிறம் (soil colour), மண் கூறுபாடு (soil texture) இவைகளைப் பொருத்து தனித்தனி மண் மாதிரி எடுத்தல் வேண்டும்.

(2) நிலத்தில் பயிர் அறுவடை முடிந்ததும் மண் மாதிரி எடுத்தல் வேண்டும்.

(3) உரமிட்ட பின் மண் மாதிரி எடுத்தல் கூடாது.

(4) மேல் மட்டத்திலிருந்து உணவுச் சத்துக்களை எடுக்கும் தானியப் பயிர்களுக்கு (surface feeding cerea crops) 6 அங்குல ஆழத்திற்கும், அதிக ஆழத்திலிருந்து உணவுச் சத்துக்களை எடுக்கும் பருத்தி, கரும்பு, வாழை

முதலியவைகளுக்கு ஒன்பது அங்குல ஆழமும், நீண்ட காலம் நிற்கும் பயிர்களை உடைய பழத் தோட்டங்களுக்கு தரை மட்டத்திலிருந்து பன்னிரண்டு அங்குலத்திற்கும்; 12 முதல் 24 அங்குல ஆழத்திற்கும் தனித்தனியே மண் மாதிரி எடுத்து அனுப்புதல் வேண்டும்.

(5) 10 அல்லது 12 இடங்களில் மண் எடுத்து அதை நன்குகக் கலந்து அதிலிருந்து ஒரு ராத்தல் மண் மாதிரி அனுப்புதல் வேண்டும்.

(6) மண் ஈரமாக இருப்பின் அதை நிழலில் உலர்த்துதல் வேண்டும். பிறகு அதை 9″ × 6″ அளவுள்ள துணிப் பைகளில் போட்டு அதனுடன் விபரத்தாளை (Information sheet) வைத்து அனுப்புதல் வேண்டும்.

6. மண் பரிசோதனை என்றால் என்ன ?

(1) **மண்ணின் இரசாயன நிலையை (soil reaction) அறிதல்.**—இரசாயன நிலையைப் பொருத்து மண்ணை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்—

(i) அமில மண் (Acid soil) pH. 6·0-க்கு குறைவு.

(ii) நடுநிலை மண் (Neutral soil) pH. 6 to 8.

(iii) கார மண் (களர்) (Alkaline soil) pH. 8·7-க்கு அதிகம்.

நடுநிலை மண்ணில்தான் நாம் அளிக்கும் உரச்சத்துக்கள் பயிர்களுக்கு எளிதில் கிடைக்கின்றன. அமில அல்லது காரத்தன்மை உள்ள மண்ணில் அளிக்கப்படும் மணிச் சத்து உரங்கள் (Phosphatic fertilisers) பயிர்களுக்கு எளிதில் கிடைப்பதில்லை. மேலும் கார நிலையில் உள்ள மண்ணில் மாங்கனீசு (Manganese), போரான் (boron), துத்தநாகம் (zinc) முதலிய பயிர்களுக்குத் தேவையான சிறு உணவுச் சத்துக்கள் (Micro Nutrients) கிடைப்ப தில்லை. எனவே, செயற்கை உரங்களை அளிப்பதற்குமுன் மண்ணைப் பரிசோதிப்பதால் அவற்றின் தன்மையை அறிந்து அமில நிலத்திற்கு சுண்ணாம்பும் (Lime) கார மண்ணிற்கு ஜிப்சம் (calcium sulphate), தொழு உரம், பசுந்தாள் உரம் முதலியவற்றைத் தக்க அளவில் அளித்து நிலத்தை நடுநிலைக்குக் கொண்டுவர சிபாரிசு செய்ய சாத்தியமாகிறது.

(2) **நீரில் கரையும் உப்பின் அளவை நிர்ணயித்தல் (estimation of total soluble salts).**—பயிர்களுக்கு அளிக்கப்படும் உரம் தண்ணீரில் கரைந்து செடிகளின் வேர்களால் உறிஞ்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது. மண்ணில் உப்புக்கள் அதிகமாக இருந்தால் அவைகள் தண்ணீரில் கரைந்து வேர்களின் உறிஞ்சும் தன்மையைக் குறைக் கின்றது. மேலும் உப்புக்கள் செடிகளின் வேர்களுக்கு நேரிடையாகவும் தீங்கிழைக்கின்றன. இதனால் செடிகள் நாளடைவில் காய்ந்துவிடுகின்றன. ஆகவே உப்பின் அளவை அறிந்து, அதிகமாக உள்ள நிலங்களுக்கு வடிகால் சீர்திருத்தம் செய்து உப்பை நீக்கவோ அல்லது உப்பு நிலத்திற்கேற்ற கேழ்வரகு (Ragi CO-2) அல்லது நெல் (P. V. R.) போன்ற பொறுக்கு விதைகளையோ உபயோகிக்க சிபாரிசு செய்யப்படுகின்றது.

(3) **எளிதில் கிடைக்கும் உணவுச் சத்துக்களின் அளவை நிர்ணயித்தல் (estimation of available N.P.K.).**—மண்ணில் உள்ள தழைச் சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவற்றுள் ஒவ்வொன்றிலும் எளிதில் கிடைக்கும் அளவும் நிர்ணயிக்கப்படுகின்றது. இதைப் பொருத்து நிலம், மிகக் குறைவு (very low), குறைவு (low), சுமார் (medium), அதிகம் (high) என தரம் பிரிக்கப்பட்டு, அந்த நிலத்தில் அடுத்த பயிருக்குத் தேவையான நாட்டு உரத்தின் அளவும், இரசாயன உரத்தின் அளவும் சிபாரிசு செய்யப்படுகின்றது.

7. மகசூலுக்கு ஒரு முறை மண் பரிசோதனை அவசியம்.- சில விவசாயிகள், ஒரு தடவை மண்ணைப் பரிசோதனை செய்தபின் தங்கள் கடமை முடிந்ததாக நினைத்துவிடு கின்றனர். நிலத்திலிருந்து பயிர்களால் எடுத்துக் கொள்ளப்படும் உணவுச் சத்துக்களின் அளவு பயிரின் வகை, கால நிலை, நிலப் பராமரிப்பு, (soil management) ஆகியவற்றைப் பொருத்து மாறுபடும் தன்மை வாய்ந்தது. ஆகவே ஒரு மகசூல் முடிந்தபின் மண்ணை சோதித்து அடுத்த சாகுபடிக்கு வேண்டிய உர சிபாரிசு பெறுதல் நலம்.

சாகுபடி வேலைகளில், அறுவடையை ஒரு மகசூலின் இறுதி வேலையாகக் கொள்ளல் கூடாது. அறுவடைக்குப் பின் முக்கிய வேலை மண் மாதிரி எடுத்து அனுப்புதல் ஆகும். இந்த உண்மை நம் நாட்டின் விவசாயிகள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் பசுமரத்தாணிபோல் பதிதல் வேண்டும்.

பயிர்களுக்கு வேண்டிய உணவுச் சத்துக்களைத் தக்க முறையில் அளிக்காமல் மிக்க விளைச்சல் கொள்ளல் அரிது. தற்பொழுது நம் நாட்டில் போதுமான உரம் உற்பத்தி செய்யப்படவில்லை. பற்றாக்குறையாக இருக்கும் ஒவ்வொரு ராத்தல் உரத்தின் முழுப் பயனையும் அடைவதில் மண்பரிசோதனை நிலையங்கள் அரிய சேவை புரிகின்றன. இதனை அறிந்தே தமிழ் நாட்டில் கோயம் புத்தூரிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில் பட்டியிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆடுதுறையிலும் இலவச மண் பரிசோதனை நிலையங்கள் அரசாங்கத்தாரால் நிறுவப்பட்டுள்ளன. மேலும் தென் ஆற்காடு மாவட்டத் தில், கடலூரில் ஒரு மண் பரிசோதனை நிலையம் வெகு விரைவில் செயல்படத் தொடங்கும். இந்த நிலையங்களில் உள்ள உதவி இரசாயன வல்லுநர்களுக்கு (Assistant Soil Chemist) மண் மாதிரிகளை அனுப்பி, அவர்களின் சிபாரிசுகளைப் பின்பற்றி விவசாயிகள் உற்பத்திப் பெருக்கம் செய்து தாங்களும் நலன் அடைவதோடு நாட்டை வளம் பெறச் செய்யும் மாபெரும் பணியில் ஈடுபடவேண்டும் !

—(: :)—

உற்பத்தியைப் பெருக்க இரசாயன உரமிடு

சென்னை மாநிலத்திற்கு ஏற்ற சிறந்த கத்தரி ரகங்கள்

(K. R. ராமன்,
N. இராமு)



கத்தரி சமவெளிப் பிரதேசங்களில் எல்லா விதமான மண்ணிலும் எல்லா காலங்களிலும், வருட முழுவதும் சுலபமாகப் பயிரிடப்படுகிறது.

கத்தரியில் பல ரகங்கள் உண்டு. அவைகள் செடியின் தன்மையிலும் வெள்ளை, ஊதா, பச்சை, வரியுள்ளவை போன்ற காய்களின் நிறங்களிலும், நீளம், உருண்டை, நீண்ட உருண்டை போன்று காய்களின் உருவத்திலும் மாறுபட்டு இருப்பவையாகும். அவைகளில் ஏராளமான ரகங்கள் இருக்கின்றன. கத்தரி ரகங்களில் H. 158 என்னும் குடியாத்தம் கத்தரியும், H. 128 என்னும் வெள்ளைக் கத்தரியும், H. 129 என்னும் நீண்ட ஊதா கத்தரியும் மிகச் சிறந்த ரகங்களென்று கோவை காய்கறி ஆராய்ச்சி பண்ணையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவ்விரு ரகங்களின் காய்கள் அதிக சுவையுடையனவ. காய்களின் காம்பில் முட்களில்லாததால் கையாளுவது எளிது. அதிக மகசூல் கொடுப்பவையாதலால் மிகுந்த லாபம் பெறலாம்.



H. 158 குடியாத்தம் கத்தரி
(Gudiyattam Brinjal)

* H. 158 என்னும் கத்தரி ரகம் மற்ற ரகங்களைவிட அதிக மகசூல் கொடுக்கக் கூடியது.

* செடிகள் நேராக வளரும்.

* செடிகளில் முட்கள் இருக்காது.

* பார்ப்பதற்கு அழகாயும், பெரியதாயும் இருக்கும்.

* காய்கள் நடுத்தர அளவு (சுமார் 3-4 அங்குல நீளமும், $1\frac{1}{2}$-2 அங்குல பருமனும்) உடையவை.

* வழவழப்பான காய்களின் மீது மங்கிய மாநிற செங்குத்தான வரிகள் காணப்படும்.

* காய்கள் சமையலுக்கு மிகவும் ஏற்றது.

* காயில் விதைகளும் அதிகமில்லை.

* இந்த ரகத்தில் காய் துளைக்கும் புழுவினால் (Fruit-Borer) அதிக சேதம் கிடையாது.

* மகசூல் எக்கர் ஒன்றிற்கு 17,000—20,000 ராத்தல் காய்கள் கிடைக்கும்.

H. 128 கொத்துவெள்ளைக் கத்தரி (Cluster-white)

* செடி நடுத்தர உயரமும் அடர்ந்த பக்கக் கிளையும் கொண்டது.

* செடிகளின் தண்டு அல்லது இலைகள், இலைக் காம்புகள், காயின் காம்பு முதலியவற்றின் மீது முட்களில்லை.

* இலைகள் நடுத்தர அளவும், பசுமை நிறமாயும், அலை, அலையான ஓரங்களையும் கொண்டிருப்பதால் செடிகள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். வீட்டுத் தோட்டம் அழகுற விளங்கச் செய்யும்.

* காய்கள் கொத்து கொத்தாய் காய்க்கும். கொத்து ஒன்றுக்கு மூன்று அல்லது நான்கு காய்கள் இருக்கும்.

* ஆகவேதான் இந்த ரகத்திற்கு கொத்து வெள்ளை (Clusterwhite) என்று பெயர் வந்தது.

* காய்கள் பசுமை கலந்த வெண்னிறமுடையன.

* காய்கள் வழவழப்பாகவும், முட்டை வடிவமாகவும், காய்களின் மேற்பாகம் சிறிது சிறுத்தும் இருக்கும்.

* காய்கள் நடுத்தர பருமனும், சராசரி இரண்டு அவுன்ஸ் எடையுமுள்ளன.

* எக்கருக்கு 18,000 முதல் 19,000 ராத்தல் வரை காய்கள் கொடுக்கிறது.

H. 129 நீள ஊதா கத்தரி (Long Purple).

* செடிகள் அதிக உயராம் வளராமல் படரும் தன்மை வாய்ந்தவை.

* செடிகளின் தண்டிலும், இலைகளிலும் ஆங்காங்கே சிறு சிறு முட்கள் காணப்பட்டாலும் காய்களின் காம்புகளில் முட்களில்லை.

* சிறியதாயும், பசுமை நிறம் கொண்டதாயும் இருக்கும்.

* காய்கள் 9 முதல் 12 அங்குல நீளமும் $1\frac{1}{2}$ அங்குல குறுக்களவும் உடையவை.

* காய்கள் நீண்டும் கருமை கலந்தஊதா நிறமாய் இருக்கும்.

* ஆகவேதான் இந்த ரகத்தை நீள ஊதா கத்தரி (long purple) என்று கூறப்படுகிறது.

* நன்கு வளர்ச்சியடைந்த காய்கள் சராசரி 3 முதல் 4 அவுன்ஸ் எடையிருக்கும்.

* எக்கர் ஒன்றுக்கு 20,000 முதல் 24,000 ராத்தல் வரை காய்கள் கொடுக்கிறது.

மேற்கூறிய கத்தரி ரகங்களில் காயை துளைக்கும் புழுவினால் ஏற்படும் சேதம் ஓரளவு குறைந்திருக்கிறது. காய்கள் சமைப்பதற்கு சுவையும் மணமும் கொண்டவை. கத்தரிக்காய் கொஸ்சு மற்றும் பஜ்ஜி முதலிய தயாரிப்புகள் செய்வதற்கு ஏற்றவை. அதிக மகசூல் கொடுக்க வல்ல இந்த கத்தரி ரகங்களை பயிரிட்டு காய்கறி உற்பத்தியை பெருக்குங்கள்.

ஒரு ஏக்கர் கத்தரி பயிரிடுவதற்கான வரவு செலவு விபரங்கள்

I. நிலத்தை பண்படுத்துதல்—

	ரூ. ந.பை
(i) நிலத்தை நான்கு முறை உழ 6 ஏர், ரூ. 3.	18 00
(ii) 30 வண்டி சாண எரு வண்டி, ரூ. 3	90 00
(iii) எரு பரப்ப 2 ஆண்கள் ரூ. 1·50, 4 பெண்கள் ரூ. 1·00	7 00
(iv) பட்டம் (Ridges and furrows) போட பார் கலப்பை உழவுக்கு ரூ. 3	3 00
(v) பட்டத்தை சரி செய்ய 8 ஆண்கள் ரூ. 1·50	12 00
	130 00

II. நாற்றங்கால் தயாரித்தலும் செடிநடுதலும்—

(i) 1 செண்ட் நிலத்தில் பாத்திகள் அமைத்து நாற்றங்கால் தயாரிக்க 8 ஆண்கள், கூலி	12 00
(ii) மக்கிய சாண எரு, 1 வண்டி	3 00
(iii) மணல் ஒரு வண்டி	1 50
(iv) ஆறு அவுன்ஸ் கத்தரி விதை, வு அன்ஸ் ரூ. 1 வீதம்	6 00
(v) விதை விதைக்க 2 பெண்கள் கூலி	2 00
(vi) ஒரு மாதம் வரை தண்ணீர் பூவாளியில் ஊற்றவும், தண்ணீர் பாய்ச்சவும்	12 00
(vii) நாற்றுக்கு ஒரு முறை D.D.T. மருந்து தெளிக்க செலவு	1 50
(viii) கத்தரி நாற்று பிடுங்க 1 பெண் கூலி	1 00
(ix) நாற்று நட 9 பெண்கள் கூலி	9 00
	48 00

III. களையெடுத்தல்—

இருமுறை களையெடுக்க, 1 களை எடுக்க 15 பெண்கள்	30 00
	30 00

IV. எருவும், எருவிடுதலும்—

(i) இராசயன உரங்கள் கிரயம்— 100 ராத்தல் அம்மோனியம் சல்பேட், ராத்தல் 16 ந.பை வீதம்; 200 ராத்தல் சூப்பர் பாஸ்பேட்டு ராத்தல் 18 ந.பை வீதம்; 100 ராத்தல் பொட்டாஷ், ராத்தல் 18 ந.பை வீதம்	54 00
(ii) ரசாயன உரமிட 2 பெண்கள், கூலி	2 00
(iii) மண் அணைத்து கொத்த 16 ஆண்கள், கூலி	24 00
	80 00

V. தண்ணீர் பாய்ச்சுதல்—

	ரூ. ந.பை
சுமார் வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச 18 தடவை தண்ணீர் கட்ட முறை ஒன்றுக்கு 2 ஆணகள், கூலி ரூ. 1·50 வீதம்.	54 00
	54 00

VI. அறுவடை செய்தல்—

அறுவடை செய்ய 36 பெண்கள், கூலி ரூ. 1·00 வீதம்	36 00
	36 00

VII. பயிர் பாதுகாப்பு—

(i) ஏக்கர் ஒன்றுக்கு 5 ரா. D.D.T. (w.p.) வீதம் மூன்று முறை மருந்தடிக்க, ராத்தல் ரூ. 2 00.	30 00
(ii) மருந்து தெளிக்க ஒரு தடவைக்கு 1 ஆண் 2 பெண்கள், மூன்று முறை மருந்தடிக்க கூலி	10 50
	40 50
மொத்தச் செலவு ..	403 50

வருமானமும் லாபமும்—

H.158 என்னும் குடியாத்தம் கத்தரி (Gudiyattam)

(i) H. 158 எனும் கத்தரி ரகத்தை பயிரிடுவதன்மூலம் கிடைக்கும் ஏக்கர் மகசூல்.	20,000 ராத்தல்.
(ii) வருமானம் ராத்தல் 10 ந.பை வீதம்.	2,000 00
(iii) செலவு போக நிகர லாபம் ..	1,593 50

H.128 கொத்து வெள்ளைக் கத்தரி (Cluster-white)

(i) H. 128 கத்தரி ரகத்தை பயிரிடுவதன் மூலம் கிடைக்கும் ஏக்கர் மகசூல சராசரி.	19,000 ராத்தல்
(ii) வருமானம் ராத்தல் 10 ந.பை. வீதம்.	1,900 00
(iii) செலவு போக நிகர லாபம் ..	1,493 50

H 129 நீள் ஊதா கத்தரி ரகம் (Long purple)

(i) H. 129 கத்தரி ரகத்தை பயிரிடுவதால கிடைக்கும் சராசரி மகசூல் ஏக்கர்.	24 000 ராத்தல்.
(ii) வருமானம், ராத்தல் 10 ந.பை.	2,400 00
(iii) செலவு போக நிகர லாபம் ..	1,993 50

இன்று, என்றையும்விட, நாட்டிற்கு அதிக உணவு தேவையாக இருக்கிறது. இது விவசாயிகளுக்கு ஒரு சவாலாகும். கிர்லோஸ்கர் டீஸல் என்ஜின்கள் இந்த சவாலுக்கு ஒரே விடையாகும்.

ஒவ்வொரு கிர்லோஸ்கர் என்ஜினும் நம்பிக்கைக்குப் பாத்திரமானதாகவும், சுலபமாக கையாளக்கூடியதாகவும், விற்பனைக்குப் பிறகு நேர்த்தியாக கவனிக்கப்படுகின்றதாகவும் இருக்கின்றது. இது மிக சம்பத்தகுந்ததும் கூட! கிர்லோஸ்கர் என்ஜின்களை உபயோகித்து நாட்டிற்கு அதிக உணவு உற்பத்தி செய்யுங்கள்.

இந்தியாவின் பயிர் நிலங்களிலிருந்து அதிக உணவிற்காக...!

கிர்லோஸ்கர்

டீஸல் என்ஜின்கள்

3 ஹார்ஸ் பவர் முதல் 15 ஹார்ஸ் பவர் வரை





மாதிரி AV 1 அண்டு JV 1
5 முதல் 7.5 ஹார்ஸ் பவர் வரை

மாதிரி 1 M
10 முதல் 12 ஹார்ஸ் பவர் வரை

மாதிரி AV 2 அண்டு JV 2
10 முதல் 15 ஹார்ஸ் பவர் வரை

கிர்லோஸ்கர் ஆயில் என்ஜின்ஸ் லிட்.,

எல்பின்ஸ்டன் ரோடு, புனா-3 (இந்தியா)

நஞ்சைத் தரிசில் பருத்தியைச் சாகுபடி செய்தல்

(எஸ். கமலநாதன், உதவி பருத்தி அபிவிருத்தி அலுவலர், கோவை.)

[இடம் : தஞ்சை மாவட்டத்திலுள்ள நல்லூர் மாணிக்கம் பிள்ளையின் வீடு.]

[சுந்தரம் பிள்ளை என்பவர் அடுத்த ஊரைச் சேர்ந்தவர். ஏதோ அலுவலாக நல்லூருக்கு வந்தவர், மாணிக்கம் பிள்ளையைச் சந்திக்க நேரிடுகிறது.]

மாணிக்கம் பிள்ளை : வாங்க, வணக்கங்க ! உட்காருங்க, ஊரிலே எல்லாரும் சுகங்களா ?

சுந்தரம் பிள்ளை : வணக்கங்க, கடவுள் கிருபையால் எல்லாரும் சுகம் தானுங்க.

(இருவரும் திண்ணைமீது உட்காருகிறார்கள்.)

சுந் : நெல் அறுவடைவெல்லாம் எப்போதுங்க ?

மாணி : நாளைக்கு ஆரம்பிக்கனுங்க (சுந்தரம் பிள்ளையின் கையில் பேப்பர் இருப்பதைப் பார்த்து) பேப்பரிலே என்னங்க புது விஷயம் இன்றைக்கு.

சுந் : புது விஷயமா ? நிறைய இருக்குதுங்க. அமெரிக்காவிலே ஜனாதிபதி....

மாணி : அதெல்லாம்தான் ரேடியோவிலே கேட்டாச்சுங் களே. ஏதேனும் நுணுக்கமான விஷயம் புதுசா இருந்தா சொல்லுங்கோ.

சுந் : நுணுக்கமான விஷயங்களா ? இருக்குதுங்க அதுவும் நம்ப ஊர் விஷயங்க, கேட்டால் நீங்களும் சந்தோஷப்படுவீங்க.

மாணி : அப்படிங்களா, வரி வஜா ஏதேனும் செய்யப் போறுங்களா ?

சுந் : அப்படி ஒன்றும் இல்லிங்க. பஞ்சு மில்லு கட்டி இருக்கிறார்களாம் நம்ம வட்டத்திலே. (கையி லுள்ள பேப்பரைக் காட்டி) இதிலே போட்டிருக்கான். இந்த மில்லில் 12,000 கதிர்கள் இருக்கிறதாம்.

மாணி : பஞ்சு மில்லா ! நம்ம ஊரைச் சுற்றி ரைஸ் மில்லுகள் தான் இருக்குது, இருக்க வேண்டியதுதான். நம்ம ஜில்லாவிலே, எங்கே பார்த்தாலும் நெல்லு விளையுது. நெல்லை அரைக்க மில்லுகள் வேண்டி யதுதான். ஜனங்களுக்கும் கைக்குத்தல் அரிசி சாப்பிடும் பழக்கம் போனதிலிருந்து இந்த ரைஸ் மில்லுகளுக்குக் குறைவில்லை. இங்கே பஞ்சு மில்லு கட்டிவிட்டால் பஞ்சுக்கு எங்கே போவது ? மற்ற இடங்களிலிருந்தல்லவா பஞ்சு வரவேண்டும் ! அதுக்குப் பருத்தி விளையும் இடங்களிலேயே மில்லைக் கட்டிவிடலாமே ! செலவும் குறையுமே !

சுந் : நம்ம ஜில்லாவிலே பருத்தி விளையாதா, என்ன ? பருத்தி விளைந்து பார்த்ததில்லையா ? ஒரு போக நஞ்சை நிலங்களில் நெல் அறுவடைக்குப் பின் பருத்தியைப் பயிரிடலாமே !

மாணி : நீங்க ரொம்ப சுலபமாகச் சொல்லிட்டீங்க. பருத்தி எங்கங்க நல்லா விளையுது ? வயலிலே ஒரு வருஷம் போட்டுப் பார்த்தேன். ஒண்ணும் சுகமில் லிங்க. மாசூலும் சரியாகக் கிடைக்கவில்லை, கிடைத்த மாசூலுக்கும் நல்ல விலை இல்லை.

சுந் : பையன் படிக்கிறான். ஒரு வருஷம் பெயிலாகி விட்டான் என்பதற்காகப் பையன் படிப்பை நிறுத்தி விடுவீர்களா ? பெயிலானதுக்குக் காரணங் கேட்டு குறைந்த மார்க்குகள் வாங்கியுள்ள பாடங்களில் தனியாகப் படிப்புச் சொல்லிக்கொடுத்து மறுமுறை பரிட்சைக்கு அனுப்புவதில்லையா ? அதுபோல வருஷம் பரிட்சையைக் கொண்டு பருத்தி சரியாக வருவதில்லை என்று சொல்லிவிடமுடியுமா ? நாம் செய்த சாகுபடி முறை சரிதானா ? குற்றம் குறைகள் ஏதேனும் உண்டா ? இவற்றைச் சரிசெய்து மறுமுறை பரிட்சை செய்து பார்க்கலாமே ! நான் பருத்திப் பயிர் செய்கிறேன். ஏக்கருக்குச்சுமார் ரூபாய் 200 லாபம் கிடைக்கிறதே !

மாணி : அது எப்படிங்க, உங்களுக்கு மட்டும் பருத்தி நல்லா வருது ? அதைக் கொஞ்சம் சொல்லுங் களேன்.

சுந் : நெல் அறுவடையானதும், பஞ்சாப் 216 எஃப் பருத்தி விதைகளைத் தாளடியின் இடையே ஊன்றணும், தூருக்கு.......

மாணி : இதெல்லாம்தான் தெரியுங்களே. பருத்தி விளையரதிலே நுணுக்கமா கவனிக்க வேண்டிய சமாசாரம் ஏதேனும் இருந்தா சொல்லுங்க.

சுந் : சொல்கிறேன், நீங்களும் நுணுக்கமாகக் கேளுங்க. நஞ்சைத் தரிசிலே பருத்தியைப் புதுசா சாகுபடி செய்யறதிலே கவனம் கொஞ்சம் அதிகமாகவே செலுத்தனும். நெல் அறுவடையின்போது முடிந்த மட்டிலே தாளைத் தரையோடு அறுக்கணும். உயர மாய்த் தாளை விட்டு அறுவடை செய்யறதினாலே பருத்தி விதை முளைப்பதிலும் வளர்ச்சியிலும் தடங்கல் ஏற்படலாம். நெல் நாற்றுக்களை எப்போதும் வரிசையாகவே நடனும். வரிசைக்கிரமமாக நடுவ தால், பருத்தி விதைகளைத் தாளடியில் வரிசைகளாக ஊன்றுவதற்குச் சுலபமாயிருக்கும்.

மாணி : இதுக்கென்னங்க. ஜப்பான் நெல் நடவே வரிசையாய் நடச் சொல்லுதுங்களே. ஜப்பான் முறைப்படி நான் நெல்லை நடுவதினாலே என் வயலில் எப்போதுமே வரிசைகளாகத்தானுங்களே நெல் நிக்குது.

சுந் : ரொம்பச் சரி, நெல்லைப் போலவே பருத்தி விதைகளையும் வரிசைகளாகத் தாளடியில் ஊன்றணும். தை மாதத்திற்குள்ளாகவே அறுவடையாகுமாறு நெல்லை நட்டால் பருத்தியை முன் பட்டத்திலே விதைக்கலாம். இதனுல் மகசூலும் அதிகமாகும்.

மாணி : பட்டம் தவருமலிருக்கத்தானே, உழவு ஓட்டாமலே தாளடியில் பருத்தியை விதைக்கிறோம்.

சுந் : ஆமாங்க. எல்லாப் பயிருக்குமே பட்டம் முக்கியமல்லவா ? ஆனுலும் நெல் அறுவடையானதுமே பருத்தியை விதைத்துவிட முடியுமா ? நிலத்திலுள்ள ஈரத்தின் தரம் தெரிந்து பதமான ஈரத்தில் தான் விதைகளை ஊன்றவேனும். ஊன்றுவதும் வரிசைகளாக இருக்கனும். அப்போதுதான் முளைக்காத இடங்களில் மறுமுறை விதைகளை ஊன்றவும் ஆள் குறைப்புச் சாதனங்களைப் பயன்படுத்தவும் சுலபமாகும்.

மாணி : நீங்க சொல்லறது சரிதானுங்க. அப்படிச் செய்தால்தான் செலவும் குறையும்.

சுந் : ஆனல் விதை விஷயத்திலே செலவைப் பார்க்காதீங்க. தூருக்கு நான்கு அல்லது ஐந்து விதைகளை ஊன்றுவது அவசியம். நஞ்சை நிலம் களிமண் பூமியானதால் விதை முளைப்புத் தடைபடும். இதைத் தவிர்க்கத்தான் அதிக விதை தேவை.

மாணி : அதனுல் என்னங்க ! விதைகளைத் தாராளமாய்ப் போட்டாப் போச்சு !

சுந் : அப்படித் தாராளமாய் நான்கு அல்லது ஐந்து விதைகளைப் போடுவதால் மறுமுறை விதைகளை ஊன்ற வேண்டிய அவசியம் வராது. பருத்திப் பயிரும் ஏக காலத்தில் வெடிக்கும். அடுத்த நெல்லுக்குத் தடங்கல் இராது. காலா காலத்தில் பருத்திப் பயிரை மடக்கி உழுதுவிடலாம்.

மாணி : தழை உரமாச்சு ! ஆனுல் நீங்கள் சொன்ன மாதிரி தாராளமாய்ப் போட்ட எல்லா விதைகளுமே முளைத்துவிட்டால் ?

சுந் : அதுக்கென்னங்க, தூருக்கு இரண்டு செடிகளை விட்டுவிட்டு மீதிச் செடிகளைக் கலைத்துவிட்டால் போதும். பூச்சிப் புழுக்கள் வந்தால் உடனே மருந்து அடிக்கனும், உரமிடனும். பருத்தியைக் காலை வேலைகளில் சுத்தமாக எடுக்கனும். அப்புறம்......

மாணி : ரொம்ப சுலபமாகச் சொல்லிட்டிங்க. பருத்தியைப் பயிரிடுவதினுல் நெல் மகசூல் குறையுதுன்னு பெரிய பண்ணையார் சொல்றுரே !

சுந் : அப்படித்தான் முதலிலே எல்லாரும் சொன்ஞங்க. பருத்திச் செடியை மடங்கி உழுது வழக்கம் போல நெல்லுக்கு உரம் போட்டால் நெல் மகசூல் குறைவதில்லை என்று ஆராய்ச்சி மூலம் கண்டு பிடித்து இருக்காங்க. அதனுலே தைரியமா நெல்லுக்குப் பின் பருத்தியைப் பயிரிடலாம். இது நமது தஞ்சை மாவட்டத்துக்கு மட்டுமல்ல, திருச்சி, தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு போன்ற ஜில்லாக்களிலும் உள்ள நஞ்சைத் தரிசில் பருத்தியை விதைக்கலாம். ஏக்கருக்குச் சுமார் ரூபாய் 200 லாபம் இடைக்கும்.

மாணி : ஆமாங்க......விளைகிற பருத்தியை எப்படிங்க விற்கிறது ! நெல்லை ஊரிலேயே வியாபாரிகள் வந்து வாங்கிக்கொண்டு போய்விடுகிருர்கள். உடனே ரூபாயும் கிடைக்குது. பருத்தியை விற்கிறது எப்படிங்க ?

சுந் : அதைப்பற்றி வீண் கவலை எதுக்குங்க ! நம் போன்ற பருத்திச் சாகுபடியாளர்களின் நன்மைக்காகத் தஞ்சாவூர் மாவட்டம் கூட்டுறவு பருத்தி மார்க்கெட்டிங் சொசைட்டி என்று ஒன்று நடக்குது. இந்தக் கூட்டுறவு சொசைட்டி ஆடுதுறையிலும், மணப்பாறையிலும் ஜின்னிங் பாகடரி வைத்து நடத்துதுங்க. இந்த சொசைட்டியில் அங்கத்தினராகச் சேர்ந்து நம் பருத்தியை விற்கலாங்க

மாணி : ஆச்சரியமாயிருக்கே ! இதெல்லா விஷயமும் உங்களுக்கெப்படிங்க தெரியும் !

சுந் : எல்லாம் விவசாய இலாக்காவின் வேலைதானுங்க. அதுக்காகத்தான் எப்பவும் விவசாய இலாகா அதிகாரிகளுடனும், சிப்பந்திகளுடனும் பேசிப் பழகி விஷயங்களைத் தெரிஞ்சுக்கனும். மேழிச் செல்வம் போல புஸ்தகங்களைப் படிக்கனும். கிராம ரேடியோ மன்ற நிகழ்ச்சிகளைக் கேட்கனும்.

மாணி : அப்படிங்களா......நானும் உங்களைப் போல எல்லா விஷயங்களையும் கேட்டுத் தெரிஞ்சுக்குறேன்.

சுந் : அதுமட்டுமல்ல, உங்கள் நிலத்தையும் பயிரையும் காண்பித்து அதற்கு வேண்டிய எல்லா ஆலோசனைகளையும் இலவசமாகப் பெறலாம். பருத்திக்கென்று தனியாக பருத்தி அபிவிருத்தி அதிகாரிகள் வேறே கோயம்புத்தூர், திருச்சி முதலான இடங்களில் இருக்கிருர்கள். அவர்களுடைய உதவியும் உங்களுக்குக் கிடைக்கும்.

மாணி :—இதெல்லாம் சொன்னதுக்கு ரொம்ப சந்தோஷங்க. இனிமேலே நீங்க சொன்ன விவசாய அதிகாரிகளையெல்லாம் சந்தித்து வேண்டிய உதவிகளைப் பெறுகிறேனுங்க. அது சரிங்க, நீங்க வந்த விஷயம் என்னங்க ? அதைச் சொல்லவே இல்லையே. நாழி ஆகிறது. எழுந்திருங்க.....சாப்பிட்டுக்கொண்டே பேசலாம்.

(இருவரும் எழுந்து செல்கின்றனர்.)

கன்றுகளைப் பராமரித்தல்

(S. புருசோத்தமன், G. J. முத்து, விவசாயக் கல்லூரிப் பால் பண்ணை, கோயமுத்தூர்-3)

மக்கட் செல்வத்தைக் காப்பதுபோல் கால்நடைச் செல்வத்தையும் கன்றுப்பருவமுதல் காத்து வளர்த்தல் இன்றியமையாததாகும். அதனால் நல்ல பசுக்களையும் காளைகளையும் நாம் காண முடியும். ஆனால் இளைத்து பலனில்லாத கால்நடை செல்வமே இன்று நாட்டின் சொத்து. கால் நடை நல்ல முறையில் பராமரிக்கப்படாது இருப்பதால் அவை பெருமளவில் இருந்தும் பயனில்லாமல் இருக்கின்றன. அந்த செல்வத்தை கருவில் உருவான கால முதல் பேணி பாதுகாத்தல் அவசியமாகும்.

சினைப் பசுக்களை கன்று ஈனும் காலத்திலிருந்து இரண்டு, மூன்று மாதங்கள் முன்னதாகவே கவனமாக பேணவேண்டும். தாய்ப் பசுக்களுக்கு சிறந்த சத்துள்ள உணவுகள் கொடுப்பதோடல்லாமல் நோய் நொடிகளினின்றும் பாதுகாத்தலும் அவசியம். காற்றோட்டமுள்ள வசதியான இடத்தில் அவற்றை வைத்தலும், மேச்சலுக்கு அனுப்பாமல் வைத்திருத்தலும் நலமாகும். கருவுற்று கன்று ஈனும் பருவத்திலுள்ள தாய்பசுக்கள் தனித்திருத்தலையே விரும்புவதாக கருதப்படுகிறது. கன்று பிறந்தவுடன் பிறந்த கன்றுகளை தூய்மையான இடத்தில் வைக்க வேண்டும். கன்றின் தொப்புள் கொடியை, தோலும் தொப்புள் கொடியும் சேருமிடத்தில் நூலால் முடியிட்டு இரண்டு அங்குல தூரம் இடவெளியிட்டு அறுக்கவேண்டும். அறுக்கப்பட்ட இடத்தில் டின்சர் அயோடின் மருந்தைத் தடவுதல் நல்லது.

கன்று ஈன்ற மூன்று அல்லது நான்கு நாட்கள் வரை சுரக்கும் பால் சீம்பால் (Colostrum) இதன் முக்கியத்துவத்தை உணராமல் பலரும் அதை கன்றுகளுக்குக் கொடுப்பதில்லை. சீம்பாலைக் கறந்து பழமையின் பெயரால் கிணறுகளில் ஊற்றி வீணாக்குவதோடு மட்டுமல்லாமல் அதை உணவாகவும் கொள்ளுகிறார்கள். சீம்பால் நோய் நொடிகளை எதிர்க்கும் சக்தியையும் எளிதில் சீரணமாகும் நல்ல உணவுச் சத்தையும் கன்றுக்குக் கொடுக்கிறது. அதில் எதிர் உயிரிகள் (Anti-biotics) உயிர்ச்சத்து 'ஏ'(A Vitamin) புரதசத்துகள் ஆகியவைகள் அதிகமாகும். இப்பாலில் கொழுப்புச்சத்து குறைவு. எனவே கன்றுகள் இதை எளிதில் சீரணிக்கின்றன.

அதிகப்பால் கறந்து மிகுந்த பணம் ஈட்டுவது ஒன்றே நோக்கமில்லாமல் கன்றுகளின் நலனையும் பேண வேண்டும். கன்றுகள் பிறந்த 5 அல்லது 6 மாதங்களுக்கு அவைகளுக்கு நிறைய பால் கொடுக்கப்பட வேண்டும். கன்றுகள் முதல் இரண்டு அல்லது மூன்று மாதங்கள்வரை வேறு தீவனங்களை உட்கொண்டு சீரணிக்க இயலாது. சுமார் 1½ லிட்டர் அல்லது 2 லிட்டர் வரை பால் கொடுக்கலாம். இதை தாய்ப்பசு கொடுக்கும் பாலின் அளவுக்கு தகுந்தவாறு அனுபவ வழியில் அறிந்து கொள்ளலாம். கன்றுகளின் வளர்ச்சிக்குத் தகுந்தவாறு இந்த அளவை நாளடைவில் குறைத்துக் கொண்டே வரலாம். இந்தப் பால் அளவோடு கேழ்வரகு, சோளம், அரிசி ஆகியவற்றின் கஞ்சியையும் கொடுத்தல் அவசியம்.

கன்றுகளின் வளர்ச்சிக்குத் தேவையான உணவுப் பொருள்களின் அட்டவணை.

வயது.	பிண்ணாக்கு (கிராம்)	தவிடு (கிராம்)	பருத்திக் கொட்டை (கிராம்.)
(1)	(2)	(3)	(4)
2-லிருந்து 3 மாதம் வரை	100	250	..
4-லிருந்து 6 மாதம் வரை	250	500	..
7-லிருந்து 9 மாதம் வரை	250	500	250
10-லிருந்து 12 மாதம் வரை	500	500	250

இது தவிர சிறிதளவு (சுமாராக 1 அவுன்சு) உப்பும் மினரல் மிக்சரும் இந்த தீவனத்தில் கலந்து கொடுத்தல் மிக்க அவசியம். நாள்தோறும் கன்றுகளுக்கு சிறிதளவு பசும்புல்லும் தரவேண்டும். ஊட்டு மறந்த கன்றுகளுக்கு தாராளமாய் தீவனம் போடவேண்டும். சாதாரணமாக 6 மாதத்திற்கு மேல் உள்ள கன்றுகளுக்கு 5–10 கிலோ கிராம் வரை பசும்புல் கொடுக்கலாம்.

கன்றுகளை வளர்ப்பதற்கு மற்றொரு முக்கியமான தேவை அவற்றிற்கு தகுந்த இருப்பிடம். கிடேரிக்கன்றுகளை காளைக்கன்றிலிருந்து பிரித்து தனியான இடங்களில் கட்ட வேண்டும். துப்புரவு முறைகளை கையாளவேண்டும். காற்றோட்டமும் சூரியவெளிச்சம் உள்ள இடத்தில் கட்ட வேண்டும். இளங்கன்றுகளுக்கு வைக்கோலாலான படுக்கைகளை போடவேண்டும். கன்றுகள் கட்டும் இடத்தில் இந்து உப்புக்கட்டிகளை (Rock salt) கயிற்றில் கட்டி தொங்கவிடுதல் நல்லது.

ஒன்றரை முதல் இரண்டு வருடத்தில் வேலைக்கு உபயோகமுள்ள காளை கன்றுகளை விரையடித்து (Castration) இரண்டரை வருடத்தில் வேலைசெய்ய அனுப்பலாம். அநேகமாக, நம்பக்கங்களில் கிடேரிக்கன்றுகள் நாலு அல்லது ஐந்து வருடங்கள் ஆகியும் பருவமடைவதில்லை. இதன் காரணம் கன்றுகளுக்கு ஆரம்பத்திலிருந்தே தகுந்த உணவுகளை கொடுத்து பராமரிக்காமல் இருத்தலே காரணமாகும். அவைகளை நன்கு கவனித்து பராமரித்தால் இரண்டு வருடத்திலேயே பருவமடைந்து மூன்று வருடத்திற்கு முன்பாகவே தாய் பசுவாக மாறமுடியும். காளைக்கு கத்துகிற கிடேரியை உடனே நல்ல காளையிடத்திலோ செயற்கை முறையிலோ கருதரித்தல் அவசியமாகும்.

கன்றுகளை இளம் பருவத்திலிருந்து முறையாகக் காத்து நல்ல உணவுகளைக் கொடுத்து செம்மையாக வளர்த்து பயனுள்ள கால்நடைச் செல்வங்களை உருவாக்குங்கள்.

பயிர் பூச்சிகளை அழித்து பன்மடங்கு விளைச்சலைப் பெருக்குவீர்

தமிழ்நாடு விவசாயத் துறை நெறியாளரால் C.1. 44425/63 தேதி 10—4—63 உத்தரவின்படி

1963-64 "ரேட் கான்ட்ராக்ட்" திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஸ்பிரேயர்கள்



'கேடார்'
அசைப்பு ஸ்ப்ரேயர்



'மாருதி'
ஃபுட் ஸ்ப்ரேயர்



'மாருத்'
கையழுத்த ஸ்ப்ரேயர்



'கேடார்–கோஃபி'
அசைப்பு ஸ்ப்ரேயர்

தயாரிப்பாளர்கள்

AMERICAN SPRING & PRESSING WORKS (PVT.) LTD.

மார்வே ரோடு, மலாடு, பம்பாய்-64.

தமிழ்நாடு, மைசூர் வினியோகஸ்தர்கள் :

ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி,
93, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு,
தபால் பெட்டி நெம்பர் 539, பெங்களூர்-2.

"கார்பரில்"

பருத்தி பூச்சிகளை அழிக்க ஒரு புதிய சக்திவாய்ந்த மருந்து

(எஸ். வேணுகோபால், எம். எஸ். ஸி. பயிர்பாதுகாப்பு அலுவலர், கோவை.)

நம் நாட்டிற்கு அந்நிய செலாவணிமூலம் அதிக டாலர் சம்பாதித்துத் தரும் பயிர் பருத்தி ஆகும். பருத்தியில் அதிகம் மகசூல் பெற அதை பூச்சிகளினின்றும் காத்து கண்காணிப்பது மிகவும் அவசியம்.

சுமார் இருபத்திநான்கு வகைக்கு அதிகமான பூச்சிகள் பருத்தியை தாக்குகின்றன. ஆனால் பத்து, பன்னிரண்டு வகை பூச்சிகள்தான் வருடா வருடம் சொல்லொண்ணு சேதத்தை விளைவிக்கின்றன.

தென் இந்தியாவைப் பொறுத்த வரையில் காய் புழுக்களே (Boll worms) பருத்தியில் அதிக சேதத்தை விளைவிக்கின்றன. அவற்றில் புள்ளியிட்ட காய்ப் புழு (Spotted boll worms) இளஞ்சிவப்பு காய்ப் புழு (Pink boll worms) என இருவகை உண்டு.

கடந்த இருவருடங்களாக முக்கியமாக கோயமுத்தூர் பகுதிகளில் "கிராம் புழு" (Gram caterpillar) வகையைச் சேர்ந்த அமெரிக்க காய்ப்புழு (Heliothis armigera) பருத்தியில் அதிக தொல்லை விளைவிப்பது கோவை விவசாயிகளின் கவனத்தை பெரிதும் ஈர்ந்திருக்கிறது. இது பருத்தி பயிரிடுவதற்கே பெரும் தடையாயிருப்பதால் விவசாயிகள் முன்னெச்சரிக்கையோடு அநேக தடுப்பு முறைகளைக் கையாண்டனர்.

விவசாயிகள் இவ்வித சங்கடங்களை எதிர்நோக்கி இருக்கும் சமயத்தில் பருத்தியைத் தாக்கும் பூச்சிகளை அழிப்பதற்கு "கார்பரில்" (செவின்) எனப்படும் மருந்து அறிமுகப் படுத்தப்பட்டது.

கார்பரில் மருந்தின் குணங்கள்

* கார்பரில் பூச்சி மருந்து ஒரு செயற்கை கார்பமேட் இரசாயனம்.

* அதிக வகை பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது.

* இதை உண்பதால் (As a stomach poison) சில பூச்சிகளும், இது மேல் பட்ட உடனேயே (As contact poison) சில பூச்சிகளும் அழிந்து போகின்றன.

* இதன் விஷத்தன்மை பலநாட்கள் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும்.

* மற்ற சாதாரண பூச்சி மருந்துகளை எல்லாம் சமாளித்துக்கொள்ளும் பூச்சிகளைக்கூட "கார்பரில்" அழித்து விடுகிறது.

* மிகவும் துரிதமாகவும், நாள்படவும் வேலை செய்கிறது. டி.டி.டீ. யைவிட வெகு வேகமாகவும் பாரதையானைவிட மெதுவாகவும் இது பூச்சிகளை கொல்லுகிறது.

* கையாளுவதற்கு அதிக அபாயமற்றது.

* சிபாரிசு செய்யப்பட்ட அளவில் தாவரத்திற்கு கேடு ஏதும் செய்யாது.

* எந்த வித சிரமமும் இல்லாமல் அறுவடை காலம் வரை எந்நேரமும் உபயோகிக்கலாம்.

* காய்கறிப் பயிரில் உபயோகித்தால் காய்கறிகளில் எந்தவிதமான துர்நாற்றமும் ஏற்படாது.

* உயர்தர பிராணிகளை பாதிக்கக்கூடிய நச்சுத்தன்மை மிகக் குறைந்த அளவே இம் மருந்தில் உள்ளது. தற்போது உபயோகத்திலுள்ள பாதுகாப்பான மருந்துகளில் இதுவும் ஒன்று.

* சிலந்தி வண்டுகளை (Mites) இது கட்டுப்படுத்தாது.

* இது மற்ற அநேக பூச்சி மருந்துகளுடன் சிரமமின்றி கலக்கும், இருந்தபோதிலும் சுண்ணும்பு மற்றும் அது போன்ற காரபொருள்களுடன் கலக்கக்கூடாது.

* கார்பரில் நீண்டகாலம் இருப்பு வைத்தாலும் அதன் குணம் குன்றுது.

உபயோகிக்கும் அளவும் முறையும்

பயிரின் வளர்ச்சியையும், பூச்சிகளின் எண்ணிக்கையையும் பொறுத்து 10 முதல் 20 பவுண்டு 10 சதம் கார்பரில் பொடி தூவவேண்டும். அதிகாலையிலேயோ அல்லது மாலையிலேயோ அதிக காற்றில்லாதுபோதுதான் தூவவேண்டும். பருத்தியில் 10 வார பயிரிலிருந்து சரியான அளவில் இரண்டு அல்லது மூன்று வார இடைவேளைக்கொரு முறை கார்பரில் மருந்து தூவினால் எல்லாப் பூச்சிகளும் கட்டுப்படுத்தப்படும். 15 நாட்கள் இடைவேளை விட்டு ஆறு முறை தூவினால் இன்னும் அதிக பலனை அளிக்கும். சிலந்தி வண்டுகளைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 10 முதல் 15 ராத்தல் கந்தகத்தூளை தூவலாம்; அல்லது 5 ராத்தல் நனையும் கந்தகத்தூளை 100 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

மற்ற பூச்சி மருந்துகளைக் கையாளும்போது அனுசரிக்கும் பாதுகாப்பு விதிகளை கார்பரில் கையாளும் போதும் கடைப் பிடிக்க வேண்டும்.

மேற்சொன்ன குணங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது பருத்தி மற்றும் காய்கறி பயிரிடும் விவசாயிகளுக்கு கார்பரில் எவ்வளவு உதவியாக இருக்கும் என அறிந்து கொள்ளலாம்.

காய் புழுவுக்கான முதல் அறிகுறி தோன்றிய உடனேயே கார்பரில் தூவி உங்கள் பருத்தியை காப்பாற்றுங்கள்.

பூசணமும் விதை சேமிப்பும்

(சி. லெ. சுப்ரமணியம், என். சண்முகம், C. S. கிருஷ்ணமூர்த்தி, பூசண இயற்பிரிவு, கோவை.)

நல்ல வித்தின் சிறப்பு அதன் உயரிய முளைப்புத் தன்மையே. தவறான சேமிப்பு முறையால் வித்துக்கள் முளைக்கும் தன்மையை இழந்து விடுகின்றன. ஆகவே நன்றாக முதிர்ந்த தேர்ந்த விதைகளை, சீராக உலர்த்தி சேமித்து வைத்தல் அவசியம்.

வித்துக்கள் கெடுவதற்குக் காரணங்கள்

விதைகளிலுள்ள ஈரக் கசிவும் உஷ்ண நிலையுமாகும். வித்திலுள்ள ஈரம் பூசணத்தை அணுகச் செய்து வித்தை கெடுத்துவிடும். நடைமுறையில் ஈர நிலை, உஷ்ண நிலை முதலானவைகளில் ஏதாவது ஒன்றைத் தான் கட்டு படுத்தமுடியும். சேமிப்பு கிடங்குகளின் குறைந்த உஷ்ண நிலையை விட விதைகளுக்குக் குறைந்த ஈர நிலை மிகவும் முக்கியமானது.

சேமித்து வைக்கப்படும் தானியங்கள் கீழ்க்கண்ட முறைகளில் கெடுகின்றன :—

(1) முளைக்கும் தன்மை கெடுதல்.

(2) தானியங்களை பக்குவப்படுத்தும் முறைகளால் கெடுதல்.

(3) மக்கிபோன தானியங்கள் நிறைந்திருத்தல்.

(4) விதை உஷ்ணம் அதிகரித்து விதைகள் வீணுதல்.

(5) பூசணம் பிடித்து விதைகள் பாழடைதல்.

பூசணங்கள் மூலமே அதிக சேதம் ஏற்படலாம். இரு வித பூசணங்கள் உண்டு.

I. விதைகளை வயலில் தாக்கும் பூசணங்கள்.—(1) ஆல்ட்டர்நேரியா (Alterneria), (2) ஹெல்மின் தோஸ் போரியம் (Helmintho sporium) (3) ஃப்யூசேரியம் (Fusarium).

II. சேமித்துள்ள விதைகளை தாக்கும் பூசணங்கள்.—(1) அஸ்பர்கில்லஸ் (Aspergillus), (2) பெனிசில்லியம் (Penicillium).

இவை வித்துக்களின் உள்ளேயும், மேலும் இருந்து வெளிப்பட்டு, ஈர அளவு அதிகமாக, வேகமாக வளர்ந்து விதைகளைப் பாதிக்கிறது.

பாதிக்கும் பூசணங்களை கட்டுப்படுத்தும் முறைகள்.

1. பூசண நாசினிகளை உபயோகித்து விதை தொற்று நீக்குதல்.

2. பூசணங்களை மாத்திரம் கொல்லக்கூடிய வாயுவில் தானியங்களைச் சேமித்து வைத்தல்.

3. வேண்டிய அளவு உலர்த்தல்.

4. பக்குவமாக உலர்த்தப்பட்ட தானியங்களோடு தான் பூசண நாசினிகளைக் கலக்கவேண்டும்.

5. சேமிப்பு இடங்களில் கரியமிலவாயு பிரயோகித்து தானியங்களைச் சேமித்து வைக்கலாம். விதைகளின் முளைப்புத் தன்மையும் நீடிக்கப்படுகிறது.

6. கிராமியச் சூழ்நிலைக்கு ஏற்றமுறை நன்கு பக்குவமாக உலர்த்தப்பட்ட, அளவோடு ஈரம் நிறைந்த விதைகளை சாக்குப் பைகளில் சேகரித்து ஈரமோ, உஷ்ணமோ பாதிக்கப்படாமல் மூடப்பட்ட கிடங்குகளிலும், அறைகளிலும் சேமித்து வைத்தல்.

ஸ்தாபிதம் 1885

தந்தி: நர்சரி — போன்: 3210

79 வருடங்களாக சேவை செய்து வரும் கான் சாஹிப் S. K. I. ஹாஜீ அப்துல் ரஹிமான் சாஹிப் ஸ்தாபனம்.

சேலம் நர்சரி கார்டன்ஸ், சேலம்.

புகழ்பெற்ற ஒட்டு மாஞ்செடிகள், எலுமிச்சை, தென்னை, இதர பழச் செடிகள், அலங்காரச் செடிகள், காய்கறி, புஷ்ப விதைகளுக்குச் சிறந்த இடம்.

Proprietor. :
S. K. A. அப்துல் ரஜாக் சாயுபு,
சேலம் நர்சரி கார்டன்ஸ்,
செரி ரோடு, சேலம்-7.
(S. India.)

ஸ்ப்ரேயர்கள், டஸ்டர்களை பராமரித்து பாதுகாக்க விவசாயிகளுக்கு உதவும் குறிப்புகள்

(திரு. சேஷகிரி ராவ், ஓய்வு பெற்ற பூச்சி நிபுணர், பெங்களூர்—2, இன்றைய ரெங்கசாமி கம்பெனியின் ஆலோசகர்.)

ஸ்ப்ரேயரின் பாகங்களும் அவற்றில் ஏற்படும் கோளாறுகளும் .—பம்ப் (Pump) பொறுத்தப்பட்ட பகுதி அதிக தாக்குதலுக்குட்பட ஏதுவானது. பிஸ்டன் பேக் (Piston Pack) செய்யப்பட்டிருக்கும் பாகமோ அல்லது தோல் கப்போ (Leather cup) தேய்ந்து போவதாலோ, எண்ணெய் பசைக் குறைவால் சுருங்கி விடுவதாலோ, வெடிப்பு ஏற்படுவதாலோ அல்லது உலர்ந்து விடுவதாலோ பம்ப் சரியானபடி வேலை செய்ய ஏதுவில்லாமல் போகிறது.

வால்வுகளில் கீழ்க்கண்டவற்றால் தொந்தரவு ஏற்படலாம்.—(1) ஸ்ப்ரே திரவத்திலுள்ள தூசுகளோ அல்லது அழுக்கோ வால்வு (குண்டுகள்)களை சரியானபடி அதன் இடத்தில் பொருந்த ஏதுவில்லாமல் போவது ; (2) ஸ்ப்ரேயர்கள் உபயோகத்துக்கு பின்பு சரியானபடி சுத்தம் செய்யப்படாமல் அப்படியே வைத்து விடுவதால், வால்வுகள் (குண்டுகள்) ஸ்ப்ரே செய்ய உபயோகிக்கும் பொருளினால், அதன் வளையத்தில் ஒட்டிக்கொள்ளுதல் ; (3) அரிப்பு உண்டாக்குவன போன்ற திரவத்தை தெளிக்க நெடுநாட்கள் உபயோகிப்பதால், வால்வு (குண்டுகள்) அல்லது அதன் இருப்பிடமான வளையம் தேய்ந்தோ அல்லது சிதைந்தோ போவது ; (4) குண்டு பொருந்த வேண்டிய பாகத்தில் கீறல்கள் ஏற்பட்டோ அல்லது கடினமான துகள்களால் சொட்டையாவதாலோ எதிர்புறமாக பாய்ந்து செல்ல வழி விடுதல் ஆகிய முதலியன.

நாசல் (Nozzle).— பகுதியில் சாதாரணமாக ஏற்படும் கோளாறு. ஸ்ப்ரே செய்யும் திரவத்திலுள்ள கடின தூள்கள் டிஸ்க்கில் (Disc) இருக்கும் துவாரத்திலும் வால்வுகள் இருக்கும் கோடுவழிகளிலும் அல்லது வர்டெக்ஸ் பிளேட்டிலும் (Vertex plates) அடைத்துக் கொள்வதால் ஏற்படுவது. அதிக உபயோகத்தால் டிஸ்க்கில் உள்ள துவாரம் பெரிதாக போனால் திடமற்ற, மெலிந்த தாறுமாறான தெளிப்புக்கு வழி உண்டாகிறது.

டஸ்டரில் ஏற்படும் சில சாதாரண கோளாறுகள்.—இதில் முக்கிய கோளாறு ஏற்படுவது—தூள்கள் கட்டிவிடுவதும் சரிவர தூள்களின் வெளிப்பாய்ச்சல் ஏற்படாததுமாகும் எனெனில் (1) ஈரப் பசையுள்ள தூள்களை உபயோகிப்பது (2) சிறிய கற்கள், நொய்கள் கலந்த மருந்துப் பொடிகளை உபயோகிப்பது. (3) தூள் பாத்திரத்தை பூரணமாக நிரப்புதல். இம்மாதிரி தவறாக கையாளப்படுவதால் கலக்கும் பாக எந்திர பகுதியும், தூளை வெளியனுப்பும் யந்திர பகுதியும் (Agitator and mechanism) சுலபமாக வேலை செய்ய முடியாமல், வடிகால் பகுதியில் கட்டிப்போன தூள்கள் சேர்ந்து டஸ்டர் சரியாக வேலை செய்வதை தடைப்படுத்துகிறது. இம்மாதிரியான சமயத்தில் உபயோகிப்பவர் (சுழலும் டஸ்டரில்) எந்திரத்திலுள்ள சுழற்றும் பாகத்தை சுற்ற கஷ்டப்பட வேண்டியிருக்கும் ஆனால் அவர் அப்படியே, எப்படியாவது வேலை செய்துவிட வேண்டும் என்று முயன்றால், எந்திரத்தை சுழற்ற வைக்க ஏதுவான "கியரை" சேர்ந்த எந்திரப்பகுதிகள் சேதமடைய நேரிடலாம்.

ஸ்ப்ரேயர்களையும் டஸ்டர்களையும் நன்கு பராமரித்து பாதுகாக்க கைக்கொள்ளவேண்டிய சில முக்கிய குறிப்புகள்

(1) ஒவ்வொரு நாள் வேலைக்கு பின்பும், வேலை செய்யும் எல்லா இயந்திரப் பகுதிகளுக்கும் எண்ணெய் பசை போடவும். (முக்கியமாக சிலிண்டர், பிஸ்டன் அசம்பளிக்கு போடவும்).

(2) வடிகட்டும் கருவி (Strainer) வழியாக தொட்டியை (Spray Tank) எப்போதும் நிரப்பவும். அது வால்வ் தொந்தரவுகளையும் நாசல்களில் (Nozzles) சிட்டம் கட்டுவதையும் தடுக்கும்.

(3) ஒவ்வொரு நாள் வேலைக்கு பின்பும், டாங்கை (Tank) நன்றாக கழுவுவதுடன் பம்ப், ஹோஸ், நாசல் பாகங்களில் சுத்தமான தண்ணீரை ஒன்று அல்லது இரண்டு நிமிஷம் பாய விட்டு கழுவி சுத்தம் செய்வதால் சிதைவு ஏற்படுவதையும், வால்வ் தொந்தரவு ஏற்படுவதையும் தடுக்கலாம்,

(4) ஸ்ப்ரேயரின் வெளிப்புறத்தில் எங்காவது சிதைவு ஏற்படுத்தக்கூடிய ஸ்ப்ரே செய்த திரவம் பரவி இருந்தால் அதை நன்றாக சுத்தப்படுத்தவும்.

(5) பாகங்களை கழற்றி சுத்தம் செய்யும்போது மண் தரையில் வைக்கக்கூடாது. பாய் விரித்தோ அல்லது தார் பாய் விரித்தோ அதன் மேல் வைக்கவேண்டும்.

(6) எப்போதும் ஸ்பேர் பாகங்களையும், உபகரண, கருவிகள் அடங்கிய பையையும் கைவசம் வைத்திருக்கவும்.

(7) பருவ ஆரம்பத்தில், பிஸ்டன், பாகிங் காஸ்கெட், வால்வ் இவைகளை சரிபார்ப்பதுடன் தேய்ந்த பாகங்களையும் மாற்றவும்.

(8) உபயோகத்தின்போது ரப்பர் குழாய்களை (Rubber hoses) பலவித கோணங்களில் வளைக்க வேண்டாம் அவற்றை இழுக்கவேண்டியதானால் குறைந்தபக்ஷமாக மெதுவாக இழுக்கவும்.

(9) டஸ்டரை உபயோகித்த பின்பு துணியால் அதிலுள்ள தூசுகளை எல்லாம் அப்புறப்படுத்தி சுத்தம் செய்யவும். டஸ்டர்களை உபயோகிக்கும்போதும் சரி, உபயோகத்துக்கு பின்பு வைத்திருக்கும்போதும் சரி, எண்ணெய் போடுவதும், வேலை செய்யும் பாகங்களை சிதைவு ஏற்படாமல் காப்பாற்றவும் ஸ்ப்ரேயர் சாதனங்களுக்கு மேலே சொல்லியபடி செய்வது போலவே செய்யவும்.

(10) இச் சாதனங்களை கிடங்கில் வைக்கும்போது கூடுமான வரையில தனிப்படுத்தி ஜாக்கிரதையாக வைக்கவும்.

டாடா-பைஸன் அண்ட் ராலீஸ் எங்கும் காணலாம்!

" உ. பி., பிஹார் வங்காளம்... "
என்ருர் டாடா. "சென்னே, கேரளா, மைசூர்... "
இடைசெறுகினுர் பைஸன்.

"மஹாராஷ்டிரம், குஜராத்" என்று அவசரக்
குரலெழுப்பினுர் ராலி தம் பங்குக்குக் குறைவின்றி
" வடக்கு, தெற்கு, மேற்கு மற்றும் கிழக்கு–
நாம் ஒரே சமயத்தில் எங்குமிருப்போம் "
எனறு இணேந்து முழங்கினர் மூவரும்.
" விநியோகக் கலேயில் நாம் மன்னர்கள்தாம்."

டாடா-பைஸனும் ராலீஸும் தனித்தியங்கி வந்த தங்கள் விற்பனே நிறுவனங்களே இணேத்து ஒரே ஸ்தாபனமாக்கிவிட்டனர். இனி டாடா-பைஸன் தயாரிப்புகள் யாவற்றையும் ராலீஸின் '.:.பெர்டிலேஸர் அண்ட் பெஸ்டிஸைட்ஸ் டிவிஷன்' விற்பனேக்குக் கொண்டுவரும். இவ்விணேப்பினுல் இந்திய விவசாயிக்கு அளப்பரிய நன்மைகள் ஏற்படும். முதன்முறையாக நாடு பூராவும் பயிர் வளர்ச்சிக்கு மட்டுமின்றி, பயிர்ப் பாதுகாப்புக்கும் தேவையான ஆலோசனேகளும் தயாரிப்புகளும் இணேக்கப்படட ஒரே ஸ்தாபனத்தின் மூலம் கிட்டப் போகிறது . விவசாய முன்னேற்றத்திற்குக் குறிப்பிடத்தக்க சேவை இது எனபதைக் கூறவும் வேண்டுமா ?



TATA-FISON RALLIS

டாடா-பைஸன் அண்ட் ராலீஸ்
பயிர் அபிவிருத்திக்குப் பணிபுரிகின்றது!

TFRY-4 TAM

திட்டமிட்டு செயலில் இறங்கினால் வெற்றி நிச்சயம் !

[ஜி. கிருஷ்ணசாமி, தாசரி குண்ணத்தூர், காட்டாங்கொளத்தூர் யூனியன்.]

நான் திருகச்சூர் தொகுதியில் தாசரி குண்ணத்தூர் என்னும் கிராமத்தில் பயிர் தொழில் செய்யும் கிராம சகாயக். அன்றொருநாள் நான் எனது கோழிப் பண்ணையைப் பார்த்துவிட்டு வயலுக்குச் சென்றிருந்த போது "குட்மார்னிங்" என்ற பழக்கப்பட்ட குரலைக் கேட்டு திரும்பிப் பார்த்தேன். கிராம சேவக் கிலிரிசீடியா செடியின் அருகில் இருந்தார்.

கிராம சேவக் முதலில் கேட்ட கேள்வி "வீட்டில் கல்யாணம் செய்வதற்கு முந்தி என்ன செய்வீர்கள்" என்றார்.

என்ன சார் கேள்வி–கல்யாணம் என்றால் முன்கூட்டியே வாங்கவேண்டிய பொருட்களை வாங்கி தயார் செய்து கொள்கிறோம். கிடைக்காத பொருளுக்கு எப்படி கிடைப்பது என்று திட்டமிட்டு செய்கிறோம் என்றேன்.

அதைப் போல் நம் கிராமத்திற்குத் தேவையான பொருட்களாகிய எரு, விதைகளை என் முன் கூட்டியே திட்டமிட்டு செய்யக்கூடாது என்று ஓங்கிக் கூறினார்.

நான் சிரித்துக் கொண்டே சொன்னேன், விவசாயம் செய்ய ஆசைமிகுந்தாலும் கூலி ஆட்கள் கிடைப்பது மிக கடினம். ஒரு குடும்பத்தை ஒன்று சேர்க்க முடியவில்லை என்றால் ஊர் வம்பு நமக்கு எதற்கு சார் என்றேன்.

அவர் அப்பொழுதும் பெருமையோடு சொன்னார்—

"இந்த உணவு உற்பத்தி திட்டம் பொதுவாக கிராமத்திற்கு அல்ல. தனித்தனி நபர்கள் திட்டத்தை தயார் செய்துகொண்டு அதன்படி நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும் என்றார். அவரிடத்தில் பழகினேன் என்றதற்காக சரி என்று ஆமோதித்தேன். பிறகு ஊரில் உள்ள அத்தனை பேரையும் கூட்டி திட்டம் ஒன்று போட்டோம். கிராமத்திற்கு மொத்தம் உரம் எவ்வளவு தேவையென்றும், கிடைத்தது போக பற்றுக் குறைக்கு கிலிரிசீடியா, கம்போஸ்ட் குழி,பசுந்தாள் உரம் போட தீர்மானித்தோம். வருடத்திற்கு மூன்றில் ஒரு பாகம் நிலைப்பரப்பில் போட வேண்டியது என்பதையும் தீர்மானித்தோம் அதில் நானும் ஒரு கிராம சகாயக்காக". இத் திட்டத்தை நிறைவேற்ற கிராம சேவக் மிகவும் ஒத்துழைத்தார். இரண்டு சமுதாய கம்போஸ்ட் குழிகள் தயார் செய்து அதற்குரிய மான்யமும் பெற்றுக்கொண்டோம்.

எங்கள் கிராமத்தில் பொறுக்கு விதைகளாகிய ஒட்டுக் கிச்சிலி, ஒட்டுச் சொர்னவாரி, கொலை நோய் தாக்காத கிச்சிலி ஆகியவைகள் மிகவும் பெருக்கி மகசூலை அதிகமாகப் பெற்றோம். நெல் கலப்புமில்லாமல் இருந்தபடியால் விலையும் கூடுதலாக விற்கப்பட்டது. இத் திட்டம் உண்மையிலே பலன் தரக் கூடியது.

ஒரு நாள் கிராம சேவக் பழையபடி என்னிடத்தில் வந்து "என்ன சார் உங்கள் உணவு உற்பத்தி திட்டம் திருப்தி தானே" என்று கேட்டார். என் திருப்தியை வெளிப்படையாக தெரிவித்தால் என் சுய கௌரவம் என்ன ஆவது. ஆகையால் திட்டம் ஏட்டில்தான் சார் என்று சொல்லிவிட்டேன். ஆனால் கிராம சேவக் விடாக்கண்டன், உடனே வீடுதோறும் சென்று எவ்வளவு உற்பத்தி என்றும், கடந்த வருடம் எவ்வளவு என்றும் கணக்கிட்டு இவ்வருடம் மகசூல் கூடுதலே என்று நிரூபித்துக் காட்டிவிட்டார்.

எங்கள் கிராமத்திலும் நாங்கள் கிலிரிசீடியா, சஸ்பேனியா, அவுரி போன்ற பசுந்தாள் உரங்களை உபயோகித்து வருகிறோம். சர்க்காரின் மான்யத்தை எதிர்பார்க்காமல் சில பலன் தரக்கூடிய திருந்திய முறைகளையும் செய்து வருகிறோம்.

நானும் எங்கள் கிராமத்தாரும் திருந்திய முறைகளைச் செய்கிறோம் என்று மனமகிழ்வுடன் இருக்கும்போது கிராம சேவக் திடீர் என்று ஒரு புதிர் போட்டார். "உங்கள் ஊரிலுள்ள ஏரி வரவு கால்வாய்கள் வெட்டி எத்தனை ஆண்டுகள் ஆகின்றன என்று கேட்டார். மறுபடியும் இந்த கிராம சேவக் வேலையிட்டார் என்று வருத்தப்பட்டதும் உண்டு. ஆனால் பிறகு சிந்தித்துப் பார்த்தபோது கிராமத்தில் உள்ள அத்தனை பேரும் சேர்ந்து ஏரி வரவு கால்வாய்களை சுத்தம் செய்தால் நீர் பிடிப்பு அதிகமாக பிடிக்குமல்லவா என்று சிந்தித்தேன். இதற்கேற்றாற்போல் அரசாங்கம் "கிராமத் தொண்டர் படை" ஏற்படுத்தவேண்டும் என்றும் ஆலோசனையும் உற்சாகத்தையும் ஊட்டினார்கள்.

ஆகவே திருந்திய முறைகளையும் விஞ்ஞான வளர்ச்சிகளையும் நம் சொந்த அனுபவத்தையும் ஒன்று சேர்த்துத் திட்டமிட்டுச் செயலில் இறங்கினால் நிச்சயமாகப் பலன் ஏற்படுவதுமல்லாமல் நாட்டின் பொருளாதாரத்தையும் பெருக்கி அந்நிய நாட்டின் ஆதரவை நீக்கி மண் ஆசை கொண்ட சீனர் போன்றவர்களுக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்கலாம்.

கிராம சகாயக்குகளிடம் விதை வாங்குங்கள்.

விவசாயச் செய்திக் கதிர்

(M. காசிவிஸ்வநாதன், T. ரகோத்தமராவ், விரிவினைப் பிரிவு கோவை-3.)

இம் மாதத்தில் கரும்புச் சாகுபடியாளர்கள் மும்முரமாக இருப்பார்கள். கரும்புச் சாகுபடியாளர்களுக்கு அரசாங்கம் அளிக்கும் பல உதவிகளை உபயோகிப்பதன் மூலம் உங்கள் கரும்பு உற்பத்தியைப் பெரிதும் அதிகரிக்கலாம். டிராக்டர்கள், இரும்புக் கலப்பைகள் மற்றும் இதர உழைப்பைக் குறைக்கும் கருவிகள் சாகுபடியாளர்களுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன. இரும்புக் கலப்பை, பார்க்கலப்பை ஆகியவை குறைந்த விலையில் விற்கப்படுகின்றன. நாற்றங்கால் தயாரித்து விநியோகிக்கப்படும் மூன்று பருக்களுள்ள 15,000 கரணைகளுக்கு 10 ரூபாய் வீதம் கொடுக்கப்படுகிறது. உரங்கள் வாங்குவதற்கும், கிணறு வெட்டுவதற்கும், ஆலைப் பிராந்தியங்களில் சாலை அமைக்கவும் கடனுதவிகள் செய்யப்படுகின்றன. பூச்சி கொல்லிமருந்துகள் பாதி விலைக்கு விற்கப்படுகின்றன. மருந்து தெளிக்கும் கருவிகள் வாடகைக்கு விடப்படுகின்றன. தவிர, அனுபவப்பட்ட பிரத்யேக அலுவலர்களைக் கொண்டு தொழில் நுட்ப ஆலோசனைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

கரும்பு நடவு.—கரும்பு நடவில் பின்வருவனவற்றை நினைவில் வைக்கவும்.

* பொறுக்கு ரகங்களையே பயிரிடவும்.

* நோயால் தாக்கப்படாத கரும்பிலிருந்து கரணைகள் தயாரிக்கவும்.

* கட்டைப் பயிரிலிருந்து கரணைகள் தயாரிக்கக் கூடாது.

* கரணைகளை நடுமுன் அரிடான் மருந்தில் (1 ராத்தல் மருந்தை 40 காலன் நீரில் கலந்து) நனைத்து நடவும். இவ்வாறு செய்வது பூசண நோய்கள் கரணைகளிலிருந்து பயிருக்குப் பரவாமல் தடுக்க உதவுகிறது.

* நடவிற்கு முன் கிடங்குகளில் ஏக்கருக்கு 20—30 ராத்தல் 5 சதவீதம் பி. எச். சி. மருந்தைத் தெளிப்பதன் மூலம் கரையான் தொந்தரவைத் தடுக்கலாம்.

* நட்டு 3-5 வாரத்திற்குள் சொட்டையான இடங்களை நிரப்பவேண்டும். அடர்த்தியாக நடப்பட்ட இடங்களிலிருந்து கரணைகளை எடுத்து சொட்டையான இடங்களில் நடலாம் அல்லது பத்து வரிசைகளுக்கு ஒரு வரிசையில் கரணைகளை இரட்டை இரட்டையாக நட்டு அதில் முளைக்கும் கரணைகளை எடுத்து நட்டும் சொட்டைகளை நிரப்பலாம்.

* ஒரு அங்குலத்துக்கும் ஆழமாக கரணைகளை மண்ணிற்குள் அழுத்தக் கூடாது.

* நடவிற்கு முன் கரணைகளைச் சேமிக்க நேர்ந்தால் கரணைகளை நிழலான இடத்தில் குவித்து காய்ந்த சோகையால் மூடி அடிக்கடி நீர் தெளித்து வரவேண்டும்.

கரும்புப் பயிரில் காய்ந்த சோலையைப் பரப்புதல்.—கடலூர் ஆராய்ச்சிப் பண்ணையில் நடந்த பரிசோதனைகளிலிருந்து கரும்பு நட்ட கிடங்குகளின் மேட்டில் (பார் மீது) காய்ந்த கரும்புச் சோலையைப் பரப்புவதன் மூலம் களை முளைப்பைத் தடுக்கலாம் என்றும், மற்ற நன்மைகளும் ஏற்படுகின்றன என்றும் தெரிகிறது. நட்டு 25-30 நாட்களுக்குப்பின் களையெடுத்ததும் பயிர் சுமார் 1-1½ அடி வளர்ந்திருக்கும்போது சோலைகளை எடுத்து பார்களின்மேல் 6-8 அங்குல உயரம்வரை பரப்பவும். வளரும் இளஞ்செடிகளுக்குச் சேதமேதும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். கிடங்கு முனைகளின் மீதுள்ள சோலைகள்மீது இரண்டு அல்லது மூன்று மண்வெட்டி மண் போடவேண்டும். அப்படிப் போடுவதால் தண்ணீர் கட்டும்போது அந்த முனையில் உள்ள சோலைகள் கீழே சரியாமல் இருக்கவும் தண்ணீர் பாய்ச்ச இடைஞ்சலாக இல்லாமலிருக்கவும் ஏதுவாகிறது. இதனால் பின்வரும் நன்மைகள் ஏற்படுகின்றன.

* களை முளைப்பு தடுக்கப்படுகிறது.

* மண்ணின் ஈரம் பாதுகாக்கப்பட்டு நீர்பாய்ச்சும் எண்ணிக்கையும் குறைகிறது.

* சாதாரணமாகச் செய்யக் கூடிய இரண்டு களையெடுப்பும் ஒரு மண்வெட்டிக் கொத்தும் தேவையற்றதாய் விடுகின்றன.

* இளங் குருத்துப் புழு பயிரை அதிகமாகத் தாக்குவதில்லை.

* மகசூலிலும் அதிக எடை கரும்பு கிடைக்கிறது.

பயிருக்குப்பின் உங்கள் மண்.—ஆண்டுதோறும் பயிர்களை விதைக்கிறீர்கள், அறுவடை செய்கிறீர்கள் ஆனால் ஒரு முறையாவது அறுவடைக்குப்பின் மண்ணில் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று நீங்கள் நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா? நீங்கள் ஒரு ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி செய்து 2,000 ராத்தல் நெல் மணியும், 4,000 ராத்தல் வைக்கோலும் அறுவடை செய்திருந்தால் அம்மண்ணிலிருந்து சுமார் 54 ராத்தல் தழைச் சத்து, 22 ராத்தல் மணிச்சத்து, 83 ராத்தல் சாம்பல் சத்து (பொட்டாஷ்) ஆகியவை அகற்றப்பட்டிருக்கும். ஒரு ஏக்கரில் 1,500 ராத்தல் கடலையும் 4,500 ராத்தல் கொடிகளும் கிடைத்தால் மண்ணிலிருந்து சுமார் 65 ராத்தல் தழைச்சத்து, 12 ராத்தல் மணிச்சத்து 38 ராத்தல் சாம்பல் சத்து ஆகியவை மண்ணிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அறியலாம். இச்சத்துக்களைத்தவிர, பயிர் விளைப்பினால் மண்ணின் பௌதிகத் தன்மையைச் சீராக வைப்பதற்கும், நுண்ணுயிர்களின் அபிவிருத்திக்குத் தேவையானதுமான கரிமப்

பொருளின் அளவும் குறைகிறது. ஆகவே ஒரு பயிரை வளர்த்து அறுவடை செய்தபின் மண்ணின் வளம் குறைகிறது.

ஒவ்வொரு பயிரும் வெவ்வேறு பயிர்ச்சத்துக்களை வெவ்வேறு அளவுகளில் எடுத்துக் கொள்வதால் மண்ணின் கார அமில நிலை பாதிக்கப்படுகிறது. அம்மோனியம் உப்புக்கள் கலந்த உரங்கள் இட்டால் மண் அமிலத் தன்மையுடையதாகிறது. சாகுபடிப் பயிர் அறுவடையானதும் போட்டியின்மையால் நிலத்தில் களைகள் வளர ஆரம்பிக்கின்றன. மண்ணின் பரப்பில் பாதுகாப்பாக தாவரங்கள் இல்லாமலிருப்பதால் பலத்த காற்றுள்ள இடங்களில் மண் காற்றில் அரித்துச் செல்லக் கூடும்.

பயிர்ச் செடிகளின் வேர்களும் மண்ணின் தன்மையை வெகுவாக பாதிக்கின்றன. நன்கு படர்ந்து பரவியுள்ள வேர்கள் மண் துகள்களை ஒன்றோடொன்று சேர்த்து சிறு சிறு கட்டிகளாக ஆக்குகின்றன. நீண்ட ஆழமாக வேருடைய பயிர்கள் அடி மண்ணின் காற்றோட்டத்தையும், வடிகாலையும் சீர்படுத்துகின்றன.

மண் இழந்த வளத்தை மீட்டு மண்ணின் பௌதிக இரசாயன நிலைமைகளை சீர்படுத்தவே அறுவடைக்குப்பின் நிலம் நன்றாக உழப்பட்டு அடி உரமாக கரிம உரங்களும் மேலுரமாக செயற்கை உரங்களும் இடப்படுகின்றன.

கோ 31 நெல்.—மானாவாரி மற்றும் புழுதியில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி. இந் நிலங்களில் சாகுபடி செய்வதற்கேற்ற வறட்சியைத் தாங்கும் தன்மையுடைய Co. 31 என்ற புதியநெல் ரகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வடஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, திருச்சி மற்றும் தென் மாவட்டங்களில் சுமார் 3 இலட்சம் எக்கர் பரப்பில் தற்போது சாகுபடியிலிருக்கும், மகசூல் குறைவாக அளிக்கும் நேர்த்தியற்ற அரிசியை உடைய நெல் ரகங்களுக்குப் பதில் இதை பயிரிடலாம். இது கிச்சிலி சம்பா (GEB-24) ரகத்தையும் இயற்கையில் வளரும் நெல் ரகத்தையும் ஒட்டு சேர்த்து உண்டான இனங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த ரகம் ஆராய்ச்சிப் பண்ணையில் ஏக்கருக்கு 1,100 கிலோ வரை மகசூல் அளித்திருக்கிறது. மாவட்டப் பரிசோதனைகளில் பிசினி, வாடன் சம்பா, பய்ய குண்டு, குருவி கலையன் ஆகிய ரகங்களைவிட சுமார் 21 சதவீதம் கூடுதலான மகசூல் (ஏக்கருக்கு சராசரி 861 கிலோ) அளித்திருக்கிறது.

ஜுலை—ஆகஸ்ட்டு மாதங்களில் விதைத்து 145 நாட்களில் (டிசம்பர்—ஜனவரி) அறுவடை செய்யலாம். நல்ல சமைக்கும் தன்மையுடைய வெண்மையான அரிசியுடையது. எடை ரீதியில் நெல்லிலிருந்து உமி நீக்கினால் 79·6 சத வீதம் அரிசியும், மில்லில் அரைத்துப் பண்படுத்தினால் 66·3 சத வீதம் அரிசியும் கிடைக்கும்.

மேழிச் செல்வம் சந்தாதாரர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தோடு முடிவாகும் "மேழிச் செல்வம்" மாத இதழ் சந்தாதாரர்களின் சந்தா எண், மாதம் ரீதியாக கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

மாவட்டம்	சந்தா எண் ஆரம்பம்.	முடிவு.
செங்கல்பட்டு	2838	2846
தென் ஆற்காடு	4445	4462
வட ஆற்காடு	8700	8838
தஞ்சாவூர்	9171	9255
திருச்சி	6864	6914
சேலம்	5197	5345
மதுரை	2295	2422
கோயமுத்தூர்	2683	2767
இராமநாதபுரம்	1882	1948
திருநெல்வேலி	6758	6814
கன்னியாகுமரி	1250	1294
நீலகிரி	..	..
உள்ளூர் சந்தா	2294	2301
	2304	2308

மேழிச் செல்வம் தொடர்ந்து பெற உடனடியாக சந்தா தொகையாகிய ரூ. 3 (மூன்று மட்டும்) அருகிலுள்ள விவசாய அலுவலகத்திலாவது அல்லது பணத்தை மணியார்டர் மூலமாக கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பியாவது புதுப்பித்துக் கொள்ளுங்கள். **புதுப்பிக்கும்போது தவறாமல் சந்தா எண்ணை அதில் குறிப்பிடவும்.** உங்கள் நண்பர்களையும் **சந்தாதாரர்களாக்குங்கள்.**

வேளாண்மைத்துறை நெறியாளர்,
தபால்பெட்டி எண் 412,
சேப்பாக்கம், சென்னை–5.

சந்தா விவரம் :—

	ரூ.	ந.பை.
தனிப்பிரதி விலை	0	25
சித்திரை மலர்	0	50
ஆண்டு சந்தா	3	00

ஆறுமாத சந்தா கிடையாது. தபால் தலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. சந்தாதாரர்கள் விலாசத்தில் மாறுதல் ஏற்பட்டால் சந்தா எண்ணைத் தெளிவாகக் குறிப்பிட்டு மேல்கண்ட விலாசத்திற்கு தெரிவிக்கவும்.

உங்கள் நெற்பயிருக்கு

போட்டாஷ்

K_2O

(நைட்ரஜன்
பாஸ்பரிக்
அமிலத்துடன்)
உபயோகியுங்கள்

பொட்டாஷ் உங்கள் நெற் பயிரின்
உரத்தையும், தரத்தையும் உயர்த்துகிறது
பொட்டாஷ் சிகப்பாகாமல் தடுக்கும்.
பொட்டாஷ் நோய் நொடிகளை எதிர்த்து
நிற்க வலுவூட்டுகிறது.
பொட்டாஷ் பதரைக் குறைத்து,
பயிர் விளைச்சலைப் பெரிதும்
அதிகரிக்கிறது.

சகஜமான
எருவுடன் ஏக்கராவுக்கு
25 கிலோ வரை
பொட்டாஷ் ம்யூரியேட்
உபயோகியுங்கள்.

பொட்டாஷ்
மலிவானது - 25 கிலோ
பொட்டாஷ் ம்யூரியேட்
விலை 8 ரூபாய்க்கும்
குறைவானது.
பொட்டாஷ்
உபயோகியுங்கள்.
அதிக வருமானம்
பெறுங்கள்.

உங்கள் உர வியாபாரியிடம்
கேட்கவும். அல்லது
இந்த முகவரிக்கு எழுதவும்:

இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜென்ஸி லிமிடெட்

8/9, தம்பு செட்டித் தெரு. த. பெ. நெ. 14, சென்னை-1

IPG 2 TMa

வெற்றிப் பாதை

(விவசாய விளம்பர நாடகம்)

[கே. எஸ். ஆலம்கீர், பி.எஸ்.ஸி. (எஜி.), வேளாண் கல்லூரி, கோவை.]

காட்சி—5

(வேதாசலத்தின் வீடு—ஏகாம்பரம், வேலாயுதம்).

(வேதாசலம்.—மாணிக்கம், சுசிலா.)

(ஏகாம்பரம் பாடிக்கொண்டே மேசை நாற்காலி இவைகளைத் துடைத்துக் கொண்டிருக்கிறன். படித்துக் கொண்டிருக்கும் சுசீலா அவன் பாடுவது பிடிக்காமல் அவனைத் திட்டுகிருள்.)

சுசிலா: ஏகாம்பரம்.... கொஞ்சம் சும்மாத்தான், இரு மய்யா. உம்முடைய பாட்டைக் கேட்டா சங்கீதமே வெறுத்துடும் போலிருக்கு.

ஏகாம்பரம்: என்னம்மா அப்படி சொல்லிட்டீங்க. அவ்வளவு அசிங்கமாவா இருக்கு நான் பாடறது. அப்படீன்னு இன்னியிலிருந்து பாடறதை நிறுத்திடுறேன். (வேலாயுதம் உள்ளே நுழைகிருர்) ஐய்யா வாங்க. இன்னைக்குதான் புன்னகைவராளியிலே ஒரு புதுப்பாட்டு பாடலாம்னு நெனச்சேன். கச்சிதமா வந்து சேர்ந்துட்டீங்க.... உக்காருங்க.

சுசிலா: ஆமா. இவரு புன்னகவராளி பாட நாகப்பாம்பு வந்து மயங்கி நிக்காது. கேக்க சகிக்காம கொத்திட்டு போயிடும்.... சரிசரி போய் காப்பி கொண்டு வா (வேலாயுதத்திடம் பணிவுடன்) வாங்க, உக்காருங்க.... என்ன வேணும்.

வேலாயுதம்: ஒண்ணுமில்லேம்மா.... அப்பாவை கொஞ்சம் பாத்து பேசிட்டுப் போகலாம்னு வந்தேன்.

சுசிலா: அப்படியா அப்பா இன்னும் கொஞ்ச நேரத்திலே வந்துடுவார். கோயம்முத்தூருக்கு போயிருக்கார்.

வேலா: அவசா சோலி போல் இருக்கு.

சுசிலா: இல்லீங்க, விவசாயிகள் தின விழாவுக்கு போயிருக்காரு.

வேலா: என்ன விழாவா....?

சுசிலா: ஆமாங்க! நம்ம தமிழ் நாட்டுலே இருக்கிற விவசாயிகளெல்லாம் வருஷத்துக்கு ஒரு தடவை கோவை விவசாயக் கல்லூரியில் கூடி, நம்ம நாட்டை விவசாயத்திலே எவ்வளவு முன்னேற்றம் அடையச் செய்யலாம் அப்படீன்னு ஆராய்ச்சி செஞ்சு வேண்டியதைச் செய்யருங்க. நீங்க போறதில்லையா.

வேதா: இல்லேம்மா. எனக்கு இதைப்பற்றி யெல்லாம் தெரியாது. தெரிஞ்சுக்கறதும் இல்லே. நம்ம தொல்லேயே நமக்கு பெரிசா இருக்கு.

சுசிலா: அதோ அப்பாவே வந்துட்டாரே.

(வேதாசலம் உள்ளே நுழைகிருர்)

வேதா: அடடே வேலாயுதம் பிள்ளையா வாங்க வாங்க எது இவ்வளவு தூரம்.

வேலா: ஒண்ணுமில்லே. உங்களைப் பார்த்து கொஞ்சம் பேசிட்டு போகலாம்னு வந்தேன்.

வேதா: ரொம்ப சந்தோஷம். என்ன எ.இ.ஓ. சார் இவரை உங்களுக்குத் தெரியுமில்லே....

ஏ.இ ஓ.: என்ன சார் ஒரு ஊர் விவசாயிகளைப் பத்தி அந்த ஊர் விவசாய அதிகாரிக்குத் தெரியாம இருக்குமா என்ன? அதுவும் நம்ம பிள்ளைவாளைப் பத்தி நினைக்காத நாளில்லே,

வேதா: என்ன வேலாயுதம் பிள்ளை, உமக்கும் நம்ம எ.இ.ஓ. சாருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கும் போலிருக்கு.

வேலா: அதெல்லாமில்லீங்க. இவரு அடிக்கடி என்னைப் பார்த்து இப்படி விவசாயம் பண்ணுங்க. அப்படி விவசாயம் பண்ணுங்க அப்படீன்னு சொல்லுவாரு. அதெல்லாம் நான் காதிலே போட்டுகிறதில்லீங்க. அதுக்கு இப்படி கேலிபண்றுரு சாரு.

வேதா: என்ன பிள்ளைவாள் அவ்வளவு அலட்சியமா சொல்லிட்டீங்களே. எக்ஸ்டன்ஷன் ஆபீஸர் சொல்றது நம்ம நன்மைக்குத்தானே.

வேலா: இருக்கலாமுங்க அனு நமக்கு அதுக்கு நேரமும் வசதியும் ஏதுங்க.

ஏ.இ.ஓ: அப்படி என்னங்க அதிக வசதி வேண்டியிருக்கு. (வேதாசலத்தைப் பார்த்து) ஒரு பிளாட்.... 10 சென்ட்லே ஜப்பானிய சாகுபடி செஞ்சு பாருங்கன்னு சொன்னேன்—அது முடியாதுன்னு சொல்கிருர் சார்—அதுக்கு என்ன வசதி வேண்டியிருக்கு.

வேதா: இ. ஓ. சார் நம்ம வேலாயுதம் பிள்ளைப் பத்தி எனக்குத் தெரியாதா என்ன.... பிளாக்லே எத்தினியோ லோன் கொடுக்கிறோம். அதுலே ஒண்ணுவது இவர் வாங்கியிருப்பாரா? கடன் வாங்கினு சர்க்கார் நிலங்களையெல்லாம் எடுத்துக்கிடுவாங்கன்னு நினைக்கிருர் இல்லையா பிள்ளைவாள்.

வேலா: அதெல்லாம் இப்ப எதுக்குங்க. நான் வந்த விஷயம்....

வேதா: சொல்லுங்க சொல்லுங்க பேச்சு சுவாரஸ்யத்திலே எங்கேயோ போயிட்டேன்....விஷயத்தைச் சொல்லுங்க.

வேலா: ஒண்ணுமில்லீங்க நாலஞ்சு வருஷமா விவசாயத்திலே ஒண்ணும் லாபமில்லீங்க. பருத்தி போட்டேன் சரியா மொளைக்கல்லே. மொளைச்சதிலேயும் பாதி புழுவு கடிச்சி சேதமாயிருச்சி. நெல்லு, சோளம் இதிலேயும் சீக்கு புழுவு அதிகமாப் போச்சு. பையனை வேற காலேசுலே சேத்துட்டேன். செலவு அதிக்மாயிடுச்சு. அதனுலே உங்க தோட்டத்துக்கு பக்கத்துத் தோட்டத்தை வித்துடலாம்னு நெனைச்சிருக்கேன். காளிமுத்து கேக்கருன். உங்க தோட்டத்துக்கு பக்கத்திலே இருக்கிறதனுலே உங்களை ஒரு ஒரு வார்த்தை கேட்டுகிட்டு அப்புறம் காளிமுத்துவுக்கு பதில் சொல்லிகிறலாம்னு வந்தேன்.

வேதா: (ஆச்சரியத்தோடு) என்ன வேலாயுதம் பிள்ளை இப்படி சொல்லிட்டீங்க. என் காதை என்னுலேயே நம்ப முடியல்லே. நிலம்....நிலம்னு அடிச்சுக்குவீங்க நீங்களா இப்படி பேசறீங்க.

வேலா: என்னங்க செய்யறது. காலையிலே எந்திருச்சு கடன்காரங்க முகத்திலே முழிக்கிறதுக்கு, எல்லாத்தையும் வித்துட்டு நிம்மதியா பக்கத்து நகரத்திலே போய் கூலி வேலே செஞ்சு பொழைக்கலாம்னு பார்க்கறேன்.

வேதா: நல்லாச் சொன்னீங்க பிள்ளைவாள்..கேட்டீங்களா ஏ. இ. ஓ. சார்.

ஏ. இ. ஓ.: ஆமாங்க..கடன்பட்டோம்கிற காரணத்துக்காக உங்களைப் போன்ற விவசாயிங்களெல்லாம் நிலத்தை விட்டுட்டுப் போயிட்டால் உற்பத்தி எங்கேயிருந்துவரும்.

விவசாயம் மற்றத் தொழில்களைப்போல இல்லீங்க.. ஒரு வியாபாரம் செய்யரோம்னு வச்சுகிங்க அதனாலே நீங்க திடீர்னு பணக்காரனாயிட்டாலோ அல்லது ஏழையாயிட்டாலோ, நாட்டினுடைய செல்வம் எந்த வகையிலும் பாதிக்கப்படப் போறதில்லே. பணம் ஒருத்தர் கையிலிருந்து ஒருத்தர் கைக்கு மாறுவ தோடு சரி. ஆனா ஒரு விவசாயினுடைய நிலத்துலே ஒருபிடி தானியம் குறைந்தாலும் சரி, அது நாட்டி னுடைய உற்பத்தியையே குறைக்குது அதேபோல ஒரு பிடி அதிகமானாலும் அது நாட்டினுடைய செல் வத்தையே அதிகரிக்குது. அப்படி இருக்கும்போது உங்களைப் போன்ற விவசாயிகள் விவசாயத்தை விட்டு விட நினைப்பது நிச்சயம் வருத்தப்பட வேண்டிய விஷயமுங்க.

வேதா: வேலாயுதம் நம்ம இ. ஓ. சார் சொல்றதைக் கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க.

ஏ. இ. ஓ.: நீங்க நான் சொல்றபடி விவசாயம் செஞ்சு பாருங்க. உங்களுக்கு திருப்தியா இருந்ததுன்னா தொடர்ந்து செய்யுங்க. இல்லேன்னா அப்புறம் சொல் லுங்க.

வேலா: அப்படியே விவசாயம் செய்யறதா இருந்தாலும் கடன்காரங்களுக்கு பதில் சொல்லணும்களே..

வேதா: அந்தக் கடன்காரங்களெல்லாம் ஒரு வருஷம் தவணை கொடுக்கும்படி நான் ஏற்பாடு செய்யறேன் மேலும் நம்ம கோவாபரேடிவ் பாங்க் இருக்கு நில அடமான பாங்க் இருக்கு......குறைஞ்ச வட்டிதான். அங்க கடன் வாங்குங்க. அதை வாங்கி கடனையெல் லாம் திருப்பிக் கொடுங்க..அப்புறம் ஒவ்வொரு வருஷமும் மகசூல் எடுத்து கொஞ்சம் கொஞ்சமா கட்டுங்க.

வேலா: சொல்றது என்னமோ சுலபம்தான்..

வேதா: அப்படி நினைக்காதீங்க..உங்களுக்கு எவ்வளவு சீக்கிரம் பணம் கிடைக்கணுமோ அவ்வளவு சீக்கிரம் கொடுக்க ஏற்பாடு செய்றேன். நீங்க நம்ம இ. ஓ. சார்கூடப் போங்க. அவரு கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரிகிட்டே கொண்டுபோய் உங்களுக்குச் சீக்கிரம் பணம் கிடைக்க நான் ஏற்பாடு செய்யறேன். நில அடமான பாங்கிலே கடன் வாங்கினா ஒண்ணு வட்டி கம்மி இரண்டு பணத்தை கொஞ்சம் கொஞ்சமா தவணையிலே கட்டலாம். மூனு 20 வருஷம் வரைக் கும் கொஞ்சம் கொஞ்சமா கட்டி கடனை அடைக்க லாம்.

வேலா: (யோசித்து) நீங்க என்ன சொல்றீங்க.

ஏ.இ.ஓ.: இதுலே யோசனை என்னங்க வேண்டியிருக்கு. நான்தான் சர்க்கார் அதிகாரி..உங்களுக்கு நம்பிக்கை யில்லே. உங்க சொந்தக்காரர், இந்த ஊர் சேர்மன் சொல்றாரு இன்னும் என்ன யோசனை வேண்டி யிருக்கு. வாங்க நம்ம ஆபீஸிக்கு போகலாம். மத்த விபரங்களை அங்கே போய் பேசுவோம். நாங்க வர்ரோம் சார்.

(வணங்கிப் போகின்றனர்)

காட்சி 6

பீ.டி.ஓ. ஆபீஸ்.

பீ.டி.ஓ., ஏ.இ.ஓ., இ.ஓ.ஐ. வேலாயுதம் முதலியோர்.

(பீ.டி.ஓ. உட்கார்ந்திருக்கிறார். வேலாயுதம், ஏ.இ.ஓ. உள்ளே நுழைகின்றனர்.)

பீ.டி.ஓ.: வாங்க மிஸ்டர் மாணிக்கம். என்ன ஃபார்மர்ஸ் டே எல்லாம் பிரமாதமா முடிஞ்சுதா? சேர்மன் வந்துட்டாரா......உட்காருங்க.

* * * * *

ஏ.இ.ஓ.: வந்துட்டாருங்க. ஃபார்மர்ஸ் டே இந்த தடவை நல்ல ஆர்கனைஸ் பண்ணியிருந்தாங்க சார்.

பீ.டி.ஓ.: ஓ! ஐ சீ....! தென் ஐ மிஸ்டு எ சான்ஸ்.. இருக்கட்டும்..இவர் யாரு?

ஏ.இ.ஓ.: இவர் வேலாயுதம் பிள்ளை நம்ம ஊர்க்காரர்.

பீ.டி.ஓ.: நம்ம ஊர்க்காரரா....ஆபீஸ் பக்கம் இவரைப் பார்த்ததே இல்லே.

ஏ.இ.ஓ.: வர்ரதில்லே..

வேலா: ஆமாங்க.

பீ.டி.ஓ.: ஆமாம் என்ன விசேஷம்.

ஏ.இ.ஓ.: விசேஷம் ஒண்ணுமில்லே சார். விவசாயத்துலே ரொம்ப நஷ்டமாயிருக்குன்னு நிலங்களை விக்கிறத் துக்கு சேர்மேன் வீட்டுக்குப் போயிருந்தார். அவர் இவருக்கு அட்வைஸ் பண்ணி பிளாக்குக்கு கூட்டி கிட்டு போயி விவசாயிகள் முன்னேற்ற வழியெல்லாம் சொல்லச் சொன்னாரு....கூட்டிகிட்டு வந்தேன்.

பீ.டி.ஓ.: ரொம்ப சந்தோஷம் (வேலாயுதத்தைப் பார்த்து) நாங்க இத்தனை பேரு உங்களைப் போன்ற விவசாயி களுக்கு உதவி செய்யக் காத்துகிட்டு இருக்கும்போது நீங்க நெலத்தை விக்கறேன்னு சொல்றீங்களே..

வேலா: என்னங்க செய்யறது கஷ்டம். வசதியில்லே..

பீ.டி.ஓ.: என்னங்க கஷ்டம் உலகத்திலே கஷ்டப்படாத ஆள்யாரு......சொல்லுங்க....ஆமா உங்களுக்கு எவ்வளவு நிலமிருக்கு?

வேலா: இருக்குமுங்க....கடவுள் புண்ணியத்திலே அஞ்சு ஏக்கர் தோட்டம்....கொஞ்சம் புஞ்சைக்காடு கிடக்குதுங்க..

பீ.டி.ஓ.: இவ்வளவு வச்சிகிட்டா கஷ்டம்னு சொல்றீங்க?

வேலா: வசதி பத்தாதுங்க..

பீ.டி.ஓ.: வசதியை ஏற்படுத்திக் கொடுக்கத்தானே நாங்க இருக்கோம். கிணறு வெட்டணுமா....பணம் தர் ரோம். நிலத்தை சீர்திருத்தணுமா அதுக்கும் பணம் கொடுத்து உதவி செய்யரோம். நல்ல பொறுக்கு விதை மருந்து இவையெல்லாம் கூட பாதி விலைக்கு கொடுத்து உதவுகிறோம். என்ன என்ன உதவி வேணுமோ அவ்வளவும் செய்யரோம்.

ஏ.இ.ஓ.: சார் இப்போ இவரு செட்டியார் வட்டிக்கடை யிலே கடனை வாங்கி முதலுக்கு மேலே வட்டி போகுதேன்னு கஷ்டப்படராரு சார். இவருக்கு செஞ்சு தரணும். சார்....அப்புறம தான் மற்ற முன்னேற்றத்தை....நாம எதிர் பார்க்க முடியும்.

பீ.டி.ஓ.: That is correct (Calling Bell அடித்து)

(E.O. cooperation கூப்பிடச் சொல்கிறார்)

(காளிமுத்து உள்ளே நுழைகிறான். பி.டி.ஓ.வை வணங்குகிறான்.)

(29-ம் பக்கம் பார்க்கவும்)

1963-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திய காலநிலை அறிக்கை.

(சி. பாலசுப்பிரமணியன், சீ. ரங்கநாதன், விவசாய காலநிலை ஆய்வுப் பிரிவு, கோயமுத்தூர்.)

1963-ம் வருடம் டிசம்பர் மாதம் முதல் தினத்தில் தமிழ் நாடெங்கிலும் பரவலாக மழை பெய்தது. அடுத்த ஆறு நாட்களில் ஆங்காங்கு மழை பரவலாக பெய்தது. பின்னர் 8-ந் தேதி முதல் 12-ந் தேதி வரை சிற்சில இடங்களில் மட்டும் மழை பெய்தது. ஆனால் 9-ந் தேதி யன்று ஆங்காங்கு சற்று கனத்த மழையிருந்தது. 13-ந் தேதி முதல் 20-ந் தேதி வரை தமிழ் நாடெங்கும் வரட்சி நிலவியது. பிறகு 21-ம் தேதியன்று சிற்சில இடங்களில் 22-ம் தேதி ஆங்காங்கும் பருவ மழை பெய்தது. மீண்டும் 23, 24-ம் தேதிகளில் தமிழகத்தில் வரட்சியே நிலவிற்று. அதன் பின்னர் 25, 26-ம் தேதிகளில் சிற்சில இடங்களில் இலேசான மழையிருந்தது. இம் மாதத்தில் கடைசி ஐந்து நாட்களிலும் காலநிலை பொதுவாக வரட்சி யாகவேயிருந்தது. இம் மாதத்திய பகல் வெப்பநிலை எல்லா நாட்களிலும் சீராகவேயிருந்தது.

காலநிலையும் பயிர் வளர்ச்சியும்.—செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் சற்று அதிக மாக மழையிருந்தது. இம் மழையால் நெல், நிலக்கடலை. கரும்பு, சோளம் முதலிய பயிர்கள் பயனடைந்தன, சம்பா நெல் அறுவடைக்கும் நிலக்கடலை அறுவடைக்கும் உதவியது. குடியாத்தம் பகுதிகளில் கரும்பை குறுத்துப் பூச்சியும், மாவுப்பூச்சியும் (Aleuroids) தாக்கின. திண்டி வனம் பகுதிகளில் ஆமணக்கை கொக்கிப் புழுக்களும், இலைப் புழுக்களும் (Prodenia) தாக்கின. தஞ்சாவூர் மாவட்டத்தில் மிக அதிகமாக மழை பெய்தது நாகப் பட்டிணம், நன்னிலம் பகுதிகளில் இம் மாதம் முதல் வாரத்தில் கடுமையான மழையிருந்தது. பட்டுக்கோட்டை, ஆடுதுறைபகுதிகளில் பெய்த மழை சம்பா தாளடி நெற்பயிர்கட்கு உகந்திருந்தது. இம் மாவட்டத்தில் நெற் பயிரில் குறுத்துப் பூச்சியும், ஆனைக்கொம்பு பூச்சியும், கொள்ளை நோயும், இலைப்புள்ளி நோயும் வெகுவாகக் காணப்பட்டன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும் சற்று கனமான மழையிருந்தது. இம் மழை பொதுவாக எல்லாப் பயிர்களுக்கும் ஏற்றதாயிருந்தது.

இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் மழை மிகக் குறைவு. மழையின்மையால் பயிர்கள் வாட்டமுற்றன. உசிலம்பட்டி பகுதிகளில் பெரும்பாலான வயல்களில் மழை யின்மையால் நெல் சாகுபடி தடைபட்டது. இப் பகுதி களில் பருத்தியை காய்ப் புழுக்களும், கருங்கிளை நோயும், எள்பயிரை சாம்பல் நோயும், மிளகாய்ப் பயிரை அசுவும் கடுமையாகத் தாக்கின. திருநெல்வேலி மாவட்டத்தில் பெய்த சற்று அதிகமான மழை நெற் பயிருக்கும், பருத்திக்கும் ஏற்றதாயிற்று. இம் மாதம் கன்னியா குமரி மாவட்டத்தில் சுமாரான மழையேயிருந்தது. இம் மழையால் நெல், நிலக்கடலை, மரவள்ளி முதலியன பெரிதும் பயனுற்றன. நெல் நடவுக்கும் இம் மழை உதவிற்று. இங்கு நெற்பயிரை குறுத்துப் பூச்சியும், மாமரத்தை சாம்பல் நோயும், இலைப்பூச்சியும் (Leaf Webber) கடுமையாகத் தாக்கின.

கோயமுத்தூர் மாவட்டத்தில் பெய்த மழையினால் சோளப்பயிர் பெரிதும் பாதிக்கப்பட்டது. இங்கு நிலக் கடலையும், பருத்தியும் அறுவடைக்கு வந்தன. இப்பகுதி களில் பருத்தியைக் காய் புழுக்களும், மிளகாயை அசுவும், கத்தரியை புள்ளி வண்டும், திராட்சையை சாம்பல் நோயும் தாக்கின, பொள்ளாச்சிப் பகுதிகளில் பருத்தி யிலும், நிலக்கடலையிலும் நாவாய்ப் பூச்சிகள் பெருமளவு காணப்பட்டன. சேலம் மாவட்டத்தில் மழை சுமாராகவே யிருந்தது. இம் மாவட்டத்தில் நெல் அறுவடைக்கு வந்தது. ஆமணக்கைக் கொக்கிப் புழுக்களும், நெற் பயிரை கொள்ளைநோயும் மிதமாகத் தாக்கின.

நீலகிரி மாவட்டத்தில் இம் மாதம் பெய்த மழை உருளைக்கிழங்கில் கிழங்கு அழுகல் (Late Blight) நோய் வெகுவாகப் பரவக் காரணமாயிற்று.

இம்மாதத்தில் குறிப்பிடத்தக்க மழையளவுகளும் பிராந்திய மழையளவுகளும் பின்வருமாறு :—

குறிப்பிடத்தக்க மழையளவுகள் (அங்குலத்தில்).

வரிசை எண்.	தேதி.	இடத்தின் பெயர்.	மழையளவு.
(1)	(2)	(3)	(4)
1	3–12–63	கடலூர்	6·22
2	5–12–63	நாகப்பட்டினம்	15·87
3	ஷை	பட்டுக்கோட்டை	6·05
4	ஷை	ஆடுதுரை	5·90
5	6–12–63	அதிராமபட்டிணம்	9·06
6	ஷை	நன்னிலம்	6·69
7	9–12–63	செங்கற்பட்டு	6·30

பிராந்திய மழையளவு (அங்குலத்தில்).

வரிசை எண்.	பிராந்தியத் தின் பெயர்.	செப்டம்பர் மாத மழையளவு.	சராசரியிலிருந்து மாறுபாடு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)
1	வடபிராந்தியம்	4·0	+0·7	சற்று அதிகம்.
2	கீழ்கரை பிராந்தியம்	13·9	+7·9	அதிகம்.
3	மத்திய பிராந்தியம்	5·4	+3·8	மிக அதிகம்.
4	தென் பிராந்தியம்	5·0	+1·7	அதிகம்.
5	மலைப் பிராந்தியம்	5·3	+2·3	அதிகம்.

1963-ம் ஆண்டு டிசம்பர் மாதக் காலநிலை அறிக்கை
மழையளவு (அங்குலத்தில்).

இடத்தின் பெயர். (1)	இம்மாத மொத்த மழையளவு. (2)	சராசரியிலிருந்து மாறுபாடு. (3)	ஜனவரி 1-ம் தேதி முதல் மொத்த மழை. (4)
வட பிராந்தியம்			
சென்னை (மீனம்பாக்கம்)	4·6	—0·8	55·2
திருர்குப்பம் *	6·5	+3·2	40·4
வேலூர்	3·5	+0·9	48·4
குடியாத்தம்	1·2	—0·6	35·1
கீழ்க்கரை பிராந்தியம்			
பாலூர் *	9·0	+4·2	60·9
திண்டிவனம் * ..	4·9	+2·6	61·7
கடலூர்	12·3	+4·8	61·2
நாகப்பட்டினம் ..	30·1	+19·1	82.3
ஆடுதுறை *	13·7	+8·5	79·2
பட்டுக்கோட்டை * ..	13·6	+8·0	55·9
மத்திய பிராந்தியம்			
சேலம்	3·2	+2·2	38·2
கோயம்புத்தூர் * ..	5·6	+3.6	18·2
கோயம்புத்தூர் ..	6·3	+5·3	20·1
திருச்சிராப்பள்ளி ..	6·6	+4·0	28·8
தென் பிராந்தியம்			
மதுரை	4·8	+2·8	33·8
பாம்பன்	7·1	—0·5	41·3
கோயில்பட்டி *	2·8	+0·6	31·8
பாளையங்கோட்டை ..	7·0	+2·9	36·4
அம்பாசமுத்திரம் * ..	7·1	+3·0	56·7
நாகர்கோயில் * ..	3·4	+1·4	53·9
கன்னியாகுமரி * ..	2·7	+1·0	44·5
மலை பிராந்தியம்			
கொடைக்கானல் ..	8·1	+3·0	68·6
கூனூர் *	6·0	+2·4	59·0
உதகமண்டலம் * ..	4·1	+2·1	49·7
நஞ்சநாடு *	2·8	+0·9	64·0

குறிப்பு.—* தமிழ்நாடு விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

கோரையைத்தடுக்க ஓர் வழி

(சி. கே. ராஜகோபாலன், எஸ். ராஜரத்தினம்,
விவசாயக் கல்லூரி கோவை-3)

கோவை விவசாயக்கல்லூரி கேந்திரப் பண்ணையில் கோரை மிகுந்திருந்த வயலில் கினி கிராஸ் (Guinea grass) என்ற தீவனப்புல் பாசனப்பயிராக மூன்று வருடம் தொடர்ந்து சாகுபடி செய்தபின் கோரைக்காக சோதனை செய்து பார்த்ததில் கோரையே காணப்படவில்லை. கோவை சிறுதானியப் பண்ணையிலும் கோரை நிறைந்திருந்த நிலத்தில் 1950-லிருந்து கினி கிராஸ் தோட்டப் பயிராக சாகுபடி செய்த நிலத்தை சமீபத்தில் சோதனை செய்து பார்த்ததில் கோரையின் அடிக் கிழங்குகள் முழுவதும் தாக்கப்பட்டிருந்தன. மேல் கிழங்குகள் மிகவும் குறைவாக இருந்தது.

கினி கிராஸ் அடர்த்தியாக வேரூன்றி வளருவதால் கோரை தாக்கப்படுகிறது. நீர்ப்பாசனம் மிகுந்த நிலத்தில் விரைவாகவும், நீர்ப்பாசனம் குறைந்த இடத்தில் மெதுவாகவும் கோரை தாக்கப்படுகிறது.

கினி கிராஸ் வளர்த்தல் மாட்டுக்குத் தீவன மாவதுடன் கோரையை ஒழிக்கும் ஒரு சிக்கன வழியுமாகும்.

(27-ம் பக்கம் தொடர்ச்சி)

பீ.டி.ஓ. : என்னங்க என்ன வேணும் ?

காளிமுத்து : ஒண்ணுமில்லீங்க இந்தப் பொறுக்கு விதை உண்டாக்கித் தர்ரதுக்கு ஏதோ கிராம சகாயக் அப்படீன்னு ஒரு 10 விவசாயிகளை கேட்டிருக்கிறதாச் சொன்னுங்க. அதுலே என்னுடை பேரையும் சேத்துக்கிறச் சொல்லலாம்னு வந்தேனுங்க.

பீ.டி.ஓ. : மிஸ்டர் மாணிக்கம் அவரைக் கவனிங்க.

(மாணிக்கமும் காளிமுத்துவும் வெளியேறுகின்றனர்)

பீ.டி.ஓ. : பார்த்தீங்களா....வேலாயுதம் பிள்ளை. மத்த விவசாயிகளுக்கு சிறந்த பொறுக்கு விதை உற்பத்தி செஞ்சு கொடுக்கறதுக்கு அவர் முன் வந்திருக்கார். இந்த மாதிரி விவசாயிகளுக்கு உதவி செய்யறவங்களுக்குத்தான் கிராம சகாயக் அப்படீன்னு பேரு' இவங்களுக்கு வேண்டிய உதவியை அரசாங்கம் செய்து, இப்போ போனவரு நாங்க சொல்ற முறைகளை எல்லாம் உடனேகையாளக்கூடிய பல விவசாயிகள்ளே ஒருத்தர். (இ.ஓ.சி. உள்ளே வருகிறார்).

பீ.டி.ஓ. : வாங்க மிஸ்டர் வரதன். இவருக்கு சில லோன்ஸ் வேணுமாம். அதுக்கு வேண்டிய ஏற்பாடு செய்யுங்க. ஸ்பெஷல் இன்டரஸ்ட் எடுத்து பணம் சீக்கிரம் டிஸ்பர்ஸ் ஆகறதுக்கு ஏற்பாடு செய்யுங்க.

இ.ஓ.சி. : எஸ் சார் வாங்க போலாம் .

(தொடரும்)

"மேழிச் செல்வத்"தில் விளம்பரம் செய்வதற்கு அனுசரிக்கவேண்டிய நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும்

(தமிழ்நாடு அரசாங்க ஆணை எண் 2938, உணவு-விவசாயம், தேதி 4—10—1963.)

1. விளம்பரச் செய்தியை ஆசிரியர் பார்த்து ஒப்புதல் அளிக்கவேண்டும். விளம்பரச் செய்தி வாசகர்கள் முக்கியமாக கிராமத்தினர் விரும்பக்கூடியதாக இருக்கவேண்டும். விளம்பரம் பொதுவான ஒழுக்க அமைதிக்கு ஆட்சேபகரமானதாக இல்லாதிருத்தல் வேண்டும்.

2. விளம்பரக் கட்டணம் முழுவதுமாக ஒரே தவணையில் விளம்பரச் செய்தியோடு சேர்த்து செலுத்திவிடவேண்டும். விளம்பரக் கட்டணத்தை பணமாகவோ அல்லது அதற்கீடான ஒப்புக் கொள்ளக்கூடிய பண மதிப்புச் சீட்டுகளாகவோ செலுத்தலாம். ஆனால் அப்பொருள் மாற்றப்பட்ட பின்புதான் அங்கீகரித்துக் கொள்ளப்படும்.

3. விளம்பரத்திற்குரிய பிளாக்குகள் உபயோகத்திற்குத் தயாராக சட்டங்களில் பொறுத்துப்பட்டதாக இருக்கவேண்டும். அப்போதைக்கப்போது ஏற்படும் நிபந்தனைகளுக்கு உட்படவேண்டும். விளம்பரத்தின் அமைப்பை குறிப்பிட்டு அனுப்பாவிட்டால் அதன் அமைப்பை ஆசிரியரே முடிவு செய்வார். விளம்பரத்தின் அச்சு நகல் அனுப்பப்படமாட்டாது.

4. விளம்பர செய்திகளை ஆங்கிலத்திலும் அனுப்பலாம். அவற்றை ஆசிரியர் குழு தமிழாக்கம் செய்வார்கள். ஆனால் பிழையில்லாதிருப்பதற்கு உத்திரவாதம் அளிக்கப்பட மாட்டாது.

5. (அ) ரசீது இரண்டு நகல்களாக விளம்பர ஏஜண்டுக்கு அனுப்பப்படும். அவற்றில் ஒன்றை அவர் விளம்பரம் செய்பவருக்கு அனுப்பி வைப்பார்.

(ஆ) விளம்பரம் தாங்கியுள்ள இதழ் தாமதித்து வெளியிடப்பட்டால் அதற்கு ஆசிரியர் பொருப்பாக மாட்டார்.

6. (அ) தற்சமயம் அமுலிலிருக்கும் விளம்பரக் கட்டணங்களாவன—

முழுப்பக்கம் (வெளி உறை).	..	ரூ. 200	ஒரு வெளியீட்டிற்கு.
முழுப்பக்கம் (உள் உறை).	..	ரூ. 150	ஷ
முழுப்பக்கம் (உள் தாள்).	..	ரூ. 120	ஷ
அரைப்பக்கம் (உள் தாள்).	..	ரூ. 60	ஒரு வெளியீட்டிற்கு
கால் பக்கம் (உள் தாள்).	..	ரூ. 30	ஷ

(ஆ) கீழ்க்கண்ட சலுகைகள் விளம்பரதாரர்களுக்கு வழங்கப்படும்.

ஆறு வெளியீடுகளில் தொடர்ந்து பதிப்பிக்கின்றவர்களுக்கு 5 சதவீதம் தள்ளுபடியும் பன்னிரண்டு வெளியீடுகளில் தொடர்ந்து பதிப்பிக்கின்றவர்களுக்கு 15 சதவீதம் தள்ளுபடியும் உண்டு. இச்சலுகைகள் வெளி உறையில் விளம்பரத்தை போடுகிறவர்களுக்குக் கிடைக்காது.

7. விளம்பர ஏஜண்டுகளுக்கு கீழ்க்கண்ட தனிப்பட்ட சலுகைகள் உண்டு:—

(அ) வருடத்திற்கு ரூ. 1,000-க்கு குறைவாக விளம்பரம் சேகரித்துக் கொடுத்தால் மேல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தில் 10 சதவீதம் தள்ளுபடியும்,

(ஆ) வருடத்திற்கு ரூ. 1,000-க்கும் மேல் விளம்பரம் சேகரித்துத் தந்தால் கட்டணத்தில் 25 சதவீதம் தள்ளுபடியும் அளிக்கப்படும்.

8. (அ) ஒப்புக்கொள்ளப்பட்டு பதிவு (கீழே 'இ'யில் உள்ளபடி) செய்யப்பட்ட ஏஜண்ட்டாக இருந்தால் மேலே 7(அ)யில் உள்ளபடி 10 சதவீதத்தையோ அல்லது 7(ஆ)-ல் உள்ளபடி 25 சதவீதத்தையோ விளம்பரத் தொகையில் கழித்துக்கொண்டு விளம்பரத்தை அனுப்பிவைக்கலாம்.

(ஆ) வருடத்தில் விளம்பரங்கள் ரூ. 1,000-ஐத் தாண்டிவிட்டால் 7 (அ) யில் உள்ள 10 சதவீதம் தள்ளுபடிக்கு மேல், கூடுதலான 15 சதவீதம் தள்ளுபடியையும் பெற்றுக் கொள்ளலாம். கமிஷனை ஏஜண்ட் விரும்பினால் வருட கடைசியில் பணமாக பெற்றுக்கொள்ளலாம் அல்லது உத்திரவு பெற்றபின் கமிஷன் தொகையை ஏஜண்ட் வரும் வருடத்திய புது விளம்பரங்களுக்குரிய தொகையில் கழித்துக்கொள்ளலாம்.

(இ) விளம்பர ஏஜண்ட் பதிவு செய்யப்பட்ட ஏஜண்ட்டாக ஒப்புக்கொள்ளப்பட்டு மூன்று மாதங்களுக்குள் ஒரு விளம்பரத்தையாவது அனுப்பிவைக்காவிடில் அவர் பெயர் ரத்து செய்யப்படும். முதல் விளம்பரம் அனுப்பியவுடன் ஆறு மாதங்கள் வரை அவர் பெயர் பதிவில் இருக்கும். அதற்குள் அவர் மற்றொரு விளம்பரம் அனுப்பாவிடில் அவரது பதிவு போதிய எச்சரிக்கைக்குப் பின் ரத்து செய்யப்படும்.

குடியரசு தினத்தன்று சென்னையில் அணிவகுப்பில் விவசாயத் துறையின் தீவிர சாகுபடித் திட்டங்களைச் சிறப்பிக்கும் அலங்கார அணி.

விவசாயச் செய்தி அலுவலகத்தில் அமெரிக்க விவசாயிகள்.

அமெரிக்க விவசாயிகளுடன் திரு. ஜான் நைட், B.Sc. (Ag.), D.H.M.S. (cornell), ரேடியோ விவசாய அலுவலர் உரையாடுதல்.

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1964

செஸ்பேனியா

* தனிப்பயிராக 4, 5 மாதங்களில் ஏக்கருக்கு 25,000—30;000 ராத்தல் பசுந்தாள் உரம் கொடுக்கும். ஏக்கருக்கு 40 முதல் 60 ராத்தல் விதை தேவை.

* வயல் வரப்புகளில் 6″ இடைவெளியில் நட்ட செடிகள் இரண்டாம் போக நெல்லுக்கு உரமாகும். ஒரு ஏக்கர் நட 4 அவுன்ஸ் விதை போதுமானது.

* வரப்புகளில் ஜூலை மாதத்தில் நட்ட செடிகள் டிசம்பரில் 60 முதல் 160 ராத்தல் விதை கொடுக்கும்.

* எவ்வித மண்ணிலும் எக்காலத்திலும் பயிர் செய்யலாம்.

* வறட்சியையும், நீர்த்தேக்கத்தையும் தாங்கி வளரும்.

* சீக்கிரம் மக்கக்கூடியது.

* வசதியுள்ள இடங்களில் தனிப்பயிராக பயிரிடுங்கள்.

* வரப்போரங்களில் நட நெல் நாற்றங்காலுடனேயே செஸ்பேனியா நாற்றுகளையும் தயாரியுங்கள்.



தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு
விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு
விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.